5

OFFICE OF THE REGISTRAR OF ...
OCT 1952
MADRAS

5/4.52

ஓம் தத் சத்.

ஓம் ஸ்ரீ விலக்ஷ்ணனந்த பரப்பிர்மணே நம:

ஸ்ரீவஷிட்டபகவான் திருவாய்மலர்ந்தருளிய ஞானவாசிட்டமும், ஸ்ரீ நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய திருவாய்மொழியும்.

இஃது

ஸ்ரீ விலக்ஷ்ணனந்த சுவாமிகளின் சிஷ்யகோடியில்
ஒருவராகிய, முசிரி தாலூகா சூரம்பட்டி
ஞான ஊழியன் **நா. மருதைக் கவண்டர்**
அவர்களால் தொகுக்கப்பெற்று,

திருச்சி ஜில்லா முசிரி தாலுகா கொளக்குடியில்
ஸ்ரீ விலக்ஷ்ணனந்த சுவாமிகளால் அமைக்கப்பெற்றிருக்கும்
வேதாந்த சபையின் தலைவரும், ௸ சுவாமிகளின்
பிரதம சிஷ்யருமான ஸ்ரீ-ல-ஸ்ரீ
அனுபவானந்த சுவாமிகளென்னும்
சீவன் முத்தரால் பார்வையிடப்பெற்று,

மு. தா. சேருகுடி ஸ்ரீமான் க. மு. கருப்பையா பிள்ளை
மனைவி சன்மார்க்க சிகாமணியாகிய
சின்னக்குட்டி அம்மாள் அவர்களால்
குளித்தலை "ஜோதி அச்சுக்கூடத்தில்"
பதிப்பித்து,
விநியோகிக்கப்பெற்றது.

நந்தன ஆவணி, க-உ

R6
N52
183317

ஓம் தத் சத்.

ஓம் ஸ்ரீ விலக்ஷணனந்த பரப்பிர்மணே நம :

வேதங்களாவன.

யசுர், ருக், சாமம், அதர்வணம் என்பதை வட மொழி வேதமென்றும், தேவாரம், திருவாசகம், திருவாய் மொழியை தென்மொழி தமிழ்வேதமென்றும் பெரியோர் கள் சொல்லுவார்கள்.

ருக்வேதத்தைத் திரு விருத்தமாகவும், யசுர்வேதத் தைத் திருவாசிரியமாகவும், அதர்வண வேதத்தைப் பெரிய திரு வந்தாதியாகவும், சாம வேதத்தைத் திருவாய்மொழி யாகவும் செந்தமிழில் நம்மாழ்வாரால் திருவாய் மலர்ந்தரு ளப்பட்டது.

முன்னுரை.

அறிவிற் சிறந்த ஞானப் பெரியோர்களே! மகான்களே !! அடியேனுடைய சிற்றுரையாவன :—

வடமொழி வேதமாகிய ஞானவாசிட்டத்தையும், தென்மொழி வேதமாகிய திருவாய்மொழியையும் சமமென அறிந்து சொல்லச் சக்தியற்றவனு யிருந்தபோதிலும், உங் களுடைய கிருபையினலேயும், எனது சற்குரு விலக்ஷணு னந்த பரமாத்மாவின் கிருபையினலேயும் சொல்லுவதற் குத் துணிந்துள்ளேன்.

வடமொழியைத் தாயென்றும், தென்மொழியைச் சேயென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். (அவை யாவன)

சேய்மொழியோ தாய்மொழியோ செப்பி லிரண்டு மொன்று – என இடைக்காடர் கூறியிருக்கிறுர்.

வேதாந்தம், சித்தாந்தம் இரண்டு மொன்றே வேறன்று. வேதாந்தமென்பது வேதத்தின் அறுதியாகிய

துரிய துரியாதீதமே (அவையாவன) என துச்சியுளானே என்றார் நம்மாழ்வாரும்.

சித்தாந்தமாவது.

அறிந்த ஞானப் பெரியோர்களுடைய சுத்த அறிவினுடைய முடிவு என்று பொருட்படுகிறது. (அவையாவன) என் சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே தேஜோமயானந்தமே என்றார் – தாயுமானவரும்.

இவ்விரண்டும் சமமென்பது யாதெனில் (உதாரணம்)
வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கு நாதாந்த மோன நலமே பராபரமே - என்றார் தாயுமானவரும். தெய்வ மறை முடிவான பிரணவ சொருபியே சித்தாந்த முத்தி முதலே - என்றார் சுவாமிகளே.

சர்வ சாஸ்திரங்களினுடைய முடிவும் பிரமந்தான் என்பதில் ஐயமில்லை. (அவையாவன)

நூலனைத்தின் சித்தாந்தமே தெல்லோர்க்கு நோக்கியதே நோர்ந்ததே தெல்லாமேது, ஞாலமெலா முறைவதே தசைவொன்றில்லா நல்லதே தொலிக்குமொளி தருவதேது, பாலுறுதன் னனுபூதி யொன்றாய்காணப் பட்டதே தொன்றாயும் பலவாமேது, சாலுகளங்கம் படைத்தும் படையாதேது, சகலமுமா யலாததேது அது சொரூபம் என்று ஞானவாசிட்டம் வீதகவ்வியன் கதை 75-ம் செய்யுள் கூறுகிறது.

வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவின் மோன
வாரிதியி னதித்திரள்போல் வயங்கிற் றம்மா — என்று

கல்லாலில் 25-ம் செ-ல். தாயுமானவரும் கூறியிருக்கிறார்.

வேதமானது அறம் பொரு ளின்பம் வீடு என்ற சதுர்வித புருஷார்த்தங்களையுடையதா யிருக்கின்றது. உதாரணம்:- இந்நூலில் 15-ம் செய்யுளைத் திருப்பிப்பாருங்கள்.

இந்நூலில் வீடு என்னும் புருஷார்த்தந்தான் ஐக்ய அநுபவத்தை அளிக்குமென்றும் மிகச் சிறந்து கனி

183317

ந்து சர்வமும் அநித்தியமென்ற நிலேயில் ஆழங் காற்பட்டு விஸ்ராந்தியை நாடியிருக்கின்ற சீடர்களுக்குமாத்திரமே போதிக்கலாமென்றும், மற்றுமுள்ளவர்களுக்கு முதல் மூன்று புருஷார்த்தங்களேத்தான் போதிக்கலாமென்றும் சத்துக்கள் சொல்வார்கள். (அவையாவன) இந்நூலில் 14-ம் செய்யுளேப்பாருங்கள்.

செய்யுள்.

ஐவர் என்ற புலவேடர் கொட்டம தடங்க மர்க்கடவன் முட்டியா
யடவிநின்று மலே யருகிநின்று சருகாதிதின்று பனி வெயிலினன்
மெய்வருந்து தவமில்லே நற்சரியை கிரியை யோகமெனு மூன்றதாய்
மேவுகின்ற சவுபான நன்னெறி விரும்பவில்லே யுலகத்திலே.

சிற்சுகோதய விலாசம் 4-ம் செய்யுள்.

ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை யுண்டுபணு ஞானமாகு
மூகமனு பவவசன மூன்றுக்கு மொவ்வுமீ துபயவாதிகள் சம்மத
மாதலி லெனக்கினி சரியை யாதிகள்போதும்மி யாதொன்றுபாவிக்கநான்
அதுவாதலா லுன்னேநா னென்று பாவிக்கி னத்துவித மார்க்க முறலா
மேது பாவித்திடினும் மதுவாகி வந்தருள்செ யெந்தைநீகுறையுமுமுண்டோ

எங்கு நிறைகின்ற பொருள். 3-ம் செ.

விரும்புஞ் சரிதைமுதன் மெய்ஞ்ஞான நான்கு
மரும்புமலர் காய்கனிபோ லன்ரூே பராபரமே.
தானந் தவம் தருமம் சந்ததமுஞ் செய்வர் சில
ஞானந் தனேயணேய நல்லோர் பராபரமே — என்று இந்நான்கு

செய்யுளும் தாயுமானவர் கூறி இருக்கிறுர்.

ஆகையினல் ஞானவாசிட்டமென்னு நூலிலே நான்காவதாகிய வீடு என்னும் புருஷார்த்தத்தைத்தான் உயர்ந்தவர்களுக்காகக் கூறப்பட்டிருக்கிறதென்பதையும் திருவாய்மொழி நூலிலே உபயவாதிகளும் உய்யும்பொருட்டு நான்கு புருஷார்த்தங்களேயும் கூறப்பட்டிருக்கிறதென்பதையும் பெரியோர்களெல்லோரு மறிந்த விஷயமே.

(இந்நூலிலும் 33-ம் செய்யுளேப் பாருங்கள்).

ஞானமார்க்கம் யாதெனில்

ஆசை நிவர்த்தி யென்றும், பிரம விர்த்தி என்றும் கூறப்படுகிறது. ஆசை நிவர்த்தியாவன ?

அற்றது பற்றெனில் உற்றது வீடு (நம்மாழ்வார்)
அற்றவர்கட் கருமருந்தே. (குலசேகராழ்வார்)
அற்றவர்கட்கு ஆரமுதமானய். (அப்பர் சுவாமி)

சுட்டதுபோ லாசை விட்டுலகா சார
துக்கமிலா ஞான சுகமேவி. (அருணகிரிநாதசுவாமி)

ஆசையில் லாட்டால் குயிலே
அத்வைத சொரூபமடி. (விலக்ஷணனந்தசுவாமி)

மாளாத காதலெனும் வர்ச்சநாபிக் கொடியின் வனத்தைச் சுட்டு — (ஞானவாசிட்டம், வஷிஸ்டர்)

ஆராவியற்கைய வாணீப்பின் அந்நிலேயே
பேரா வியற்கை தரும் — என்று வள்ளுவர் முதலானவர்களும் கூறி இருக்கிறார்கள்.

பிரமவிர்த்தியாவன.

அந்தகாரங் குகையி லாயிரனு ளிருந்தாலும்
செந்தீபங் கண்டவுடன் றீர்வது போலென்றவரோ.
குத்துவெட்டும் படைகளிறைற் கூடுமோ விருள்துறக்க
உத்தமமா ரவியுதித்தா லோடுமிரு லென்றவரோ.
(தாலாட்டில் பரமாத்வும்)

மிடியிலா ஞானத்தீயால் வேறெடும் வெந்துபோமே.
துங்க ஞானமே அஞ்ஞானத்தைச் சுடுகின்ற நெருப்பாமே
(ஞானவாசிட்டத்தில் வஸிஷ்டரும்)

மூலநோய் தீர்க்கு முதல்வன் கண்டாய் (அப்பர் சுவாமியும்)
மூலத்தின் கற்பனே மூலத்தி லனேயுமைந்தனே.
(விலக்ஷணனந்த சுவாமிகளும்)

நாடீர் நாடோறு வாடா மலர்கொண்டு அவன் நாமம்
பாடினல் வீடே பெறலாமே —நம்மாழ்வாரும் கூறி இருக்கிறார்கள்.

இவ் விரண்டு மார்க்கங்களு முக்கியமான முறையே. (அவையாவன)

உண்மைஞான மெம்மட்டும்வாரா தம்மட்டுள மழியா
திண்மையுள மெம்மட்டழியா திகழ்தத்துவ மம்மட்டெய்தா
தண்மையுறு வாதனை யெம்மட்டழியா தம்மட்டுணர்வணுகா
வண்மையுணர் வெம்மட்டணுகா வருவாதனை யம்மட்டழியா.

(ஞான வாசிட்டம் உபசாந்திப் பிரகரணம் 49-ல் வஸிஷ்டரும்)

வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணிலென்று
ஆர்வுற்ற என்னை யொழியயென்னின் முன்னம்
பாரித்துத்தான் என்னை முற்றப் பருகினன்
காரொக்கும் காட்கரையப்பன் கடியனே. — திருவாய்மொழி

9, 6, 10 நம்மாழ்வாரும் கூறி இருக்கிறார்கள்.

சரீரம் நானென்னும் அகங்காரத்தை விட்டவர்களைத்தான் ஞானவான்களென்று சத்துக்கள் சொல்லுவார்கள். (உதாரணம்)

மலவுடல் நானல்லவென்று (வஷிஸ்டரும்)

யாவனொருவன் தன்னுடம்பை யானென்றிருக்குமியல்பொழிந்தால் — என்று கீதையில் பகவானும்,

ஊணமராக்கை உடம்புதன்னை உணரிற் பொருளன்று என்று சம்பந்த சுவாமியும்,

தேககமுதல் நானென்ற துவைதந் தள்ளி — என்று விலக்ஷணானந்த சுவாமிகளும் கூறி இருக்கிறார்கள்.

சரீரமறந்த ஞானிகளிலக்கணமாவது.

வஞ்ச வேல்கொடு மார்பி னெரியினு
மெஞ்சவே தழன் மூடி யெரியினு
நஞ்சின ரழகாக நலியினு
மஞ்சிடா ரஸ் தானந்த மாவதே — பகவத்கீதை

6-வது அத்தியாயத்தில் 17-ல் பகவானும்,

சரமழைக ணெய்தன் மலர்மழையை யொக்குந்
தழற்பள்ளி பனிநீரிற் சயன மொக்கும்
சிரமறிதர் சுகமுறு நித்திரையை யொக்குந்
தேகமரி வதுகலவைச் செறிபூ சொக்கும்

நிரலதிக நாராச மருமம் பாய்த
நெடுங்கோடைச் சிவிறியி னன்னீரை யொக்கும்
விரவரிய விடயமெனும் விடவிடுசி விவேக
மிகுத்தவர்க் கல்லால் விலக் கொணுதே. — என்று

ஞானவாசிட்டம், முமுட்சுபிகரணம் 13-ல் வசிட்டரும் கூறி இருக்கிறார்கள்.

இதுவுமது.

துன்பமும் இன்பமுமாகிய செய்வினையாய் உலகங்களுமாய்
இன்பமில் வெந்நரகாகி இனியநல்வான் சுவர்க்கங்களுமாய்
மன்பல் லுயிர்களுமாகிப் பலபலமாய மயக்குகளால்
இன்புறும்இவ் விளையாட்டுடையானைப்பெற்று ஏதும் அல்லலிலனே.

திருவாய்மொழி, 3, 10, 7-ல் நம்மாழ்வாரும் கூறி இருக்கிறார்.

சொந்த சுவானுபூதியில் அழுந்திய பெரியோர்கள் நிலையை அறிந்த பெரியோர்கள் சொல்லுவது யாதெனில், பந்தமில் சுகருக் கெங்குமே நின்ற பரபிர்ம சோதியைத் தொழுவாய் - என்று விடோபா சுவாமிகளும், அங்கமே நின் வடிவமான சுகரைக் கூப்பிடநீ எங்குமே ஏனேன் என்னே பராபரமே. ஓதரிய சுகர்போலவே ஏனேனென வொருவரிலையோவென - என்று தாயுமானவரும், திறம் பெறு தேவர் மூவராலெனினும் சிறிதுபிற்செல்வது மரிதா மென வாசிட்டத்தில் வசிட்டரும்,

காரண மிறந்தொன் றிங்குங் காட்சியிற் படாத தொன்றைச்
சேர்பவர் வருத்தம் வேறெண செப்பிட லாவதென்ன
லோர்வரி திதுதான்வாழு முயிர்களா லாவதென்று
லாரவர் பெருமைதன்னை யளவறுப்பவர்களையா. — என்று

பகவத்கீதை 12-வது அத்தியாயம், 4-ல் பகவானும் கூறி இருக்கிறார்கள்.

சத் கருமங்கள் விடவேண்டிய காலம் யாதெனில்,

உய்வகை யோக மொருப்படு வார்க்குக்
கைவரு மாசெயல் காரணமே காண்.
மெய்வரு யோகம் விளைந்தபின் மெய்யே
செய்வன வானவை தீமை யவேயாம்.

கீதையில் 6-வது அத்தியாயம், 4-வது செய்யுளில் கூறப்படுகிறது.

சத்கருமம் விட்டாலும், விடாதிருந்தாலும் சீவன் முத்தர்களிடம் குற்றமில்லை. (உதாரணம்)

கர்மங்கள் செய்துந்தீர்ந்தும் கையுறு பயனென்றில்லை. ஞானவாசிட்டம் கூறுகிறது. அறிவிற்சிறந்த எவரும் கிரிஸ்துவர், மகமதியர், பௌத்தர், சமணர், சைவர், வைணவர், பாவலர், தத்துவ ஆராய்ச்சிக்காரர் எல்லோருமே எந்நாட்டார்களுமே, எச்சமயத்தவர்களுமே நம்மாழ்வாரை போற்றாதவர்களில்லை என்பதில் ஐயமில்லை என்று சத்துக்கள் சொல்லுவார்கள். எல்லாச் சமயத்தவர்களையும் ஆட்கொள்வதற்காக எழுந்தருளியிருப்பதுபற்றியே பகவானானவர் நம்மாழ்வாரே என்று அழைத்தார் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

இந்நூலின் அடக்கம்.

சகுணம், நிர்க்குணம், பெரியோர்கள், குருமார்கள் ஆசை யொழித்தல், பிரமவிர்த்தி, புருடப் பிரயத்தனம், பிரம நிச்சயம், சுவானுபூதி அநுபவம், மூவர்களாகிய கடவுளர்களின் அபேதம், அர்ப்பணம் என்ற பதினொரு விஷயங்கள் முக்கியமானவைகளென்று தெரிவித்துக்கொண்டும், அடியேனுடைய குற்றங்களைப் பொருத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டும் இம் முன்னுரையில் என்னபிப்பிராயமே இல்லையென்றும் சொல்லிவிட்டு அடியேனுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன் மகான்களே.

சுபம்!

ஓம் தத் சத்.
சற்குருவே நம:

விநாயகர் துதி.

வடமொழி கீர்வாணவேதமும் தென்மொழி கீர்வாணவேதமும்
வகையதாய் சமமெனக்காட்ட வல்லப முடையவனல்லேன்
வண்மையில் லாதோன் வாய்மொழிகார்க்க வருக
வருக வென்றழைத்தேன் வரமிகு கணபதியுனையே.

உபாசனமூர்த்தி துதி.

வெள்ளியங் கிரியைமீதே வேரொடு மெடுத்தவீரக்
கள்ளவன் புயநாலைந்தும் கணகமா மவுலிபத்தும்
துள்ளியம் புவிமேல்வீழ வொருகணை தொடுத்துவிட்ட
வள்ளலம் புயமேயன்ன மலரடி வணக்கம்செய்வாம்.

சற்குரு வணக்கம்.

சோதியே சோதியுறு சுடராகிநின்று மச்சுடரினிற் றேன்று மொழியே
சூக்ஷ்ப்பிரகாசமே சொல்லற்ற சோதியே தொண்டனேன் தன்னையாளும்
ஆதியே யானந்த பூதியே யடியார்க ளாவலுற நின்ற பேறே
அன்பெனுங் கொடிதாவ வின்பெறுங் கினையாகி யறிவாகி நின்றபொருளே.
நீதியே நிற்குண நிரஞ்சன நிராகார நிர்விஷய கைவல்யமே
நேராத நேர்மையே நித்தியா னந்தமே நிலநின்ற நாதவடிவே
போதமே போக்கற்ற புண்ணிய சொரூபமே புத்தமிர்த ஞானகுருவே
புகழாரு சின்மய சுலக்ஷண மலக்ஷண விலக்ஷணானந்த குருவே.

[விலக்ஷண மென்பது சைதன்யமே வேறன்று.]

பொருள் வணக்கம்.

நூல் அவதாரிகை.

பொன் னுலகத் தினிற் புவியி லந்தரத்
தென் னுடை யுட்புறத் திலங்கு கின் றது
மன் னுசிற் சோதியே வடிவமி யாவுமாய்த்
துன் னுவ தப்பொரு டொழு திறைஞ்சுவாம்.

ஞானவாசிட்டம், வைராக்கியப் பிரகரணம் 15-ம் செய்யுள்.

உயர்வற வுயர்நலம் உடையவன் யவனலன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனலன்
அயர்வறு மமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே.

1-ம் பத்து, 1-ம் திருவாய்மொழி, 1-ம் செய்யுள்.

இத்திருவாய்மொழியை நாலாயிரபிரபந்தத்தில் 11 செய்யுளையும் பாருங்கள். இந்நூல் கணக்கு 1-ம் செய்யுள்.

மடமையொடு வாழ்கின்ற வாழ்வினீசர்
மனைதொறு மோட்டிரந் துழல்கை வரிசையாகு.

ஞா. முமூட்சுப்பிரகரணம் 15.

நிறம் கிளர்ந்த கருஞ்சோதி நெடுந்தகையை
நினையாதார் நீசர் தாமே.

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி 11, 6, 8.
2-ம் செய்யுள்.

பொது அறிவிப்பு.

வடமொழி வேதமாகிய ஞானவாசிட்ட மென்னும் தாய்மொழி முன்னும், தென்மொழி வேதமாகிய திருவாய் மொழியாகிய சேய் மொழி பின்னுமாக இந்நூல் அமைக் கப்பட்டிருக்கிறது. ஆனல் இப்பாக்களில் சொல் வேற்று மையே யொழிய பொருள் வேற்றுமையன்று. (எப்படி யெனில்) ஒருவர் சாப்பிடுவதற்குத் தண்ணீர் என்கிறார். மற்றொருவர் குடிப்பதற்கு ஜலமென்றார் என்பதைப்போ லுள்ளது. ஆகையால் பெரியோர்களே! பாக்களை அழுந் திப் பார்க்கவேண்டும். அடியே னுணர்ந்தவனன்று. சர்வ சாஸ்திரங்களும் அப்பியாசிகளுக்கேயொழிய சீவன் முத் தர்களுக்கன்று. சாஸ்திரங்கள் அப்பியாசிகளை இவ்வித மாக அனுட்டிக்கவேண்டுமென்று சட்ட திட்டங்களுக்கு உட்படுத்திக்கொண்டிருக்குமேயன்றி சீவன் முத்தர்களைக் கட்டுப்படுத்தாது. சீவன் முத்தர்களென்னும் அநுபவம் வாய்ந்த திறமையான ஞானிகள் சாஸ்திரங்களுக்கு எத்த னையோமடங்கு அதிகப்பட்டவர்களென்று சத்துக்களும் சொல்லுவார்கள். வேதங்களும் கூறுகின்றன. பெருகு வாதனைதீர் நெஞ்சில். (பேசும்நூ லனைத்தும் வேண்டாம்)
-ஞானவாசிட்டம்.

தாயைவிட உயர்ந்த பொருள்கள்.

தெருளுறு மகர்க்கிதஞ் செய்யு மன்பினு
லருமை வாசிட்டநூற் கன்னை யொப்பளோ
வுரியதாய் பிறவியை யுள்ள தாக்குவள்
பெருமை வாசிட்டமிப் பிறப்பை மாற்றுமே.

ஞா. வை. 19.

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும் அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன் நாராயணா வென்னு நாமம்.

(பெரிய திருமொழி 1, 1, 9.)

3-ம் செய்யுள்.

பொது அறிவிப்பு.

சீவன் முத்தர்கள் இவ்விதமாயிருப்பார்கள் என்று சாஸ்திரங்கள் சொல்லுமே யொழிய இவ்விதமா யிருக்க வேண்டுமென்று எங்கும் சொல்லவில்லை என்பதை பெரியோர்க ளறிந்த விஷயமே. அஞ்ஞானி சீவனென்றும் சீவன் முத்தர் பரமாத்மாவென்றும் அப்பியாசி இவ்விரண்டுமல்லவென்றும் சத்துக்கள் சொல்லுவார்கள். (பின் வருமாறு முறையே) பிணக்கி யாவரும் யாவையும் பிழையாமல் பேதித்து (நம்மாழ்வார்) இஃது சீவன்கள் மாயையில் முழுகிவிடுகின்றன தென்றும், (பேதமைபோய் நல்லறிவு தோன்றினோரை - விலங்கு கவசத்தோரை யம்புகள் போற் காமாதி விகற்பந் தாக்க (வசிட்டர்) இஃது பரமாத்மாவாகிய சீவன் முத்தரை மாயை வருத்தமுடியாதென்றும் மாயை இறந்துவிட்டதென்றும்) அநவரதஞ் சொரூபத்தை யடையாதாரை பவ்வமென வருந்துயரின் மூழ்குவிக்கும் மிம் மாயைப் பண்புதானே (வசிட்டர்). இஃது விசாரணை மறந்தபோது அப்பியாசிகளை மாயை பேதிக்கச் செய்யு மென்பதையும் மேல்கண்ட செய்யுள்கள் கூறுகின்றன. சமுத்திரத்தின் இக்கரை சீவனென்றும், அக்கரை சீவன் முத்தரென்றும், கப்பல் சென்றுகொண்டிருப்பதை அப்பியாசி யென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். வருமாறு. இக்கரை கடந்திடி லக்கரையே இனி யிருப்பது சிதம்பரம் சர்க்கரையே - என்று ராமலிங்க சுவாமிகளும் கூறியிருக்கிறார். கடவுளை வணங்கும் சன்மார்க்கத் துறையிலிறங்கிவிட்டால் கீழ்மை யடைய மாட்டார்களென்று வேதங்கள் கூறுகின்றன. (அவையாவன) காலான முதற் பூமி கைவந்தால் முத்தியுங் கைவந்ததாமே. மூன்றும் பூமியில் நடந்து மாண்டோர் மெள்ள மெள்ள வீடுவந்துசேர்வர்.

(கைவல்யமும்) தேசிகன்சொல் பிழையாமல் அநுட்டிக்கில் பையப் பையத் தியக்கும் நீங்கும். (வாசிட்டமும்) வினைவல் விருளென்னும் முனைகள் வெருவிப்போம் நினைமின் நெடியானே - என்று திருவாய் மொழியும் கூறுகின்றன.

ஆசை யாவரையுங் கெடுக்குமெனல்.

பைந்தொடியா ராசைநோய் கெம்பீர மனிதரையும் பதுமந் தன்னை
முந்திரவிக் கதிர்போலு மிளிர்விக்குங் கனவிடியின் முனைகூர் வாளும்
வெந்தவிருப் புப்பொறியு மெனக்கொடிய மனவேட்கை மேரு வொத்தோர்
சுந்தர ஞானியர் தீரர் சூரரையெல்லா மிமைப்பிற் றுறும்புசெய்யும்.

ஞா. வை. 83.

குறுகமிக வுணர்வத்தோடு நோக்கி எல்லாம்விட்ட
இறுகலிறப் பென்னும் ஞானிக்கும் அப்பயனில்லையேல்
சிறுக நினைவதோர் பாச முண்டாம் பின்னும் வீடில்லை
மறுகலி லீசனைப் பற்றி விடாவிடில் விடஃதே.

தி. 4, 1, 10. [4-ம் செய்யுள்.

ஆத்மவிசாரத்தால் ஜீவிப்பதே மேலானவாயுளாம்.

அடைய வேண்டிய தடைந்து மேற்றுயர மற்றின்ப மளவிலாதாய்க்
கடைய தாந்தரு விலங்கு பறவைகள்போல் வீணாள்கள் கழியாதாகித்
தடையிலா மனனத்தால் வாழ்வதே யுயர்வாணாள் சநகந் தீர்ந்தோ
ருடைய பிறப்புயர்ந்ததாங் கிழவேசரிப் பிறப்பா மொழிந்த வெல்லாம்.

ஞா. வை. 69.

தேனேடு வண்டாலும் திருமா லிருஞ்சோலை
தானிடமாக் கொண்டான் தடமலர்க் கண்ணிக்காய்
ஆன்விடையே ழன்றடர்த்தாற்கு ஆளானா ரல்லாதார்
மானிடவ ரல்லரென்று என்மனத்தே வைத்தேனே.

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி 11, 7, 9.
5-ம் செய்யுள்.

மேற் செய்யுள்களின் பிரமாணங்கள். பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறியார் மக்கட்பேர் அல்ல என்று வள்ளுவரும், சிறந்தார்க் கெழுதுணையாம் செங்கண்மால் நாமம், மறந்தாரை மானிட மாவையேன் — இயற்பா இரண்டாந் திருவந்தாதி 44-ம் செய்யுளில் பூதத்தாழ்வாரும் கூறி இருக்கிறார்கள்.

சற்குணமுள்ள வெவ்வன மரிதெனல்.

எத்திறத்தோ ரெவ்வனமா மிடையூற்றைக் கடந்தெளிதி னேறவல்லோ
ரத்திறத்தோ ரேபுருட ரவர்களே தொழற்குரியோ ரவரேசான்றோர்
மெய்த்திறத்தோர் சேரிடமாய் விநயநிதி படைத்தருளால் விளங்காநிற்குஞ்
சுத்தகுண வெவ்வனமிவ் வுலகிலுளதோ விசும்பிற் சூழ்காடுண்டோ.

ஞா. வை. 92.

கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவிய கோயில்
வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ் சோலை
தளர்வில ராகில் சார்வது சதிரே. தி. 2, 10, 1.

6-ம் செய்யுள்.

சர்வமும் பிரமத்தி லைக்கியமாமெனல்.

சித்தர் பொன்றுவர் துருவனுஞ் சிதைகுவன் சிவனயன் றிருமார்பன்
றத்துவந் தனி லொன்றுவர் காலமுந் தருமமு மூடிவாகு
மத்த வானும்போ மயக்கமே தருவதாய் வாக்கொடு செவிக்கெட்டாச்
சுத்தமாம் பொரு ளொன்றினு லிகழ்வுறத் தொல்லுல கிழிவாகும்.

ஞா. வை. 121.

பாருருவி நீரெரிகால் விசும்பு மாகிப்
பல்வேறு சமயமு மாய்ப் பரந்துநின்ற
ஏருருவில் மூவருமே யென நின்ற
இமையவர்தம் திருவுருவே றெண்ணும் போது
ஓருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ
ஒன்றுமா கடலுருவம் ஒத்து நின்ற
மூவுருவும் கண்டபோது ஒன்றும் சோதி
முகிலுருவம் எம்மடிக ளுருவந் தானே.

திருமங்கையாழ்வார் திருநெடுந் தாண்டகம் 2.

7-ம் செய்யுள்.

சீவன்முத்தர் இலக்கணமியாதெனில்.

அயனெடு மால் சங்கரனுஞ் சதாசிவனு மிந்திரனு மருக்கன்றானும்
வியனிலுப சாந்தராம் வேலையினி லுபாதியெலாம் விட்டு நீங்கிப்
பயனில் சக மென்கின்ற பற்றகன்று சின்மயமாம் பரமரூபம்
முயர்வி கற்ப மிலாவடிவா யெங்குநிறை சிவமாகி யொன்றாய் நிற்கும்.

ஞான. ஞானவிண்மகன் கதை 44.

ஒளிமணி வண்ணனென்கோ ஒருவனென் றேத்தநின்ற
நளிர்மதிச் சடையனென்கோ நான்முகக் கடவுளென்கோ
அளிமகிழ்ந்து உலகமெல்லாம் படைத்தவை யேத்தநின்ற
களிமலர்த் துளவன்எம்மான் கண்ணனை மாயனையே. தி. 3, 4, 8.

இத் திருவாய்மொழியை பிரபந்தத்தில் 11-யும் பார்க்க.

8-ம் செய்யுள்.

அறிஞர்கள் மனது பிரமமேயெனல்.

முழுது சத்தியுமாய்ப் புரணமா யென்று முடிவறு பிரமமாவது தான்
பழுதின் ஞானிக டம்மன மலாதில்லைப் பரமமா மிதிவிலா தில்லை
யெழுதருஞ் சத்தி யாவுமா யிலங்கு மிவைகளோர் காலமொன் றுளதாம்
வழுவிலாப் பிரம முடையசிற் சத்தி மறிதரு முடல்களிற் றேன்றும்.

ஞா. பாலன் கதை 1.

காண்கின்ற நிலமெல்லாம் யானே யென்னும்
காண்கின்ற விசும்பெல்லாம் யானே யென்னும்
காண்கின்ற வெந்தீயெல்லாம் யானே யென்னும்
காண்கின்ற இக்காற்றெல்லாம் யானே யென்னும்
காண்கின்ற கடலெல்லாம் யானே யென்னும்
காண்கின்ற கடல்வண்ண னேறக் கொலோ
காண்கின்ற உலகத்தீர்க்கு என் சொல்லுகேன்
காண்கின்ற என் காரிகை செய்கின்றவே.

தி. 5, 6, 3. [9-ம் செய்யுள்.

பிரமமே நித்யமெனல்.

யேகமாய் மெய்யா யிலங்கிய பிரம மெங்குமா
யிருக்கவுந் தோன்ருச்
சோகமாய்ப் பொய்யாய் விளங்குரு மாயை
தோன்றுரு திருக்கவுந்தோன்றும்.

ஞா. உற்பத்திப் பிரகரணம் 28.

அவரவர் தமதமது அறிவறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி யடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறைவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.

தி. 1, 1, 5. [10-ம் செய்யுள்.

ஆத்மானு சந்தான நிருபணம்.

கூறிய புந்தியினுலே யூகித்துக் குடும்பியெனும் குறிப்பை மாற்றித்
தூரிய தரம்படி மனத்தின் றுவக்கருத்து விருந்தபடி துணிந்து நிற்பாய்.
ஞா. உற்பத்தி 69.

கொண்ட பெண்டிர் மக்க ளுற்ருர் சுற்றத்தவர் பிறரும்
கண்டதோடு பட்டதல்லால் காதல் மற்று யாது மில்லை
எண்திசையும் கிழும் மேலும் முற்றவும் உண்ட பிரான்
தொண்ட ரோமாய் உய்ய லல்லால் இல்லைகண்டீர் துணையே.
தி. 9, 1. 1. [11-ம் செய்யுள்.

ஆத்மானுபவ நிருபணம்.

பிறப் பிறப்பாம் பூட்டதனைப் பிணித்துழற்றும் வாதனையாம் பெரியபாச
மறப்பெரிய முயற்சியினு லறுத்திடுவாய் பரமமா மறிவின் முன்னே
புறப்படும் பொய்யா முள்ளம் புவனவிகற்பங்க ளெனும் பொய்யைக் காட்
[டுஞ்
சிறப்புள விண்ணிலதாயு மிலதான நீலதிறஞ் செறிவதே போல்.
ஞா. உற்பத்தி 70.

போற்றி மற்ருேர் தெய்வம் பேணப் புறத்திட்டு உம்மையின்னே
தேற்றிவைத்தது எல்லீரும் வீடு பெற்ருல் உல கில்லையென்றே
சேற்றில் செந்நெல் கமல மோங்குதிருக் குருகூ ரதனுள்
ஆற்றவல் லவன் மாயம்கண்டீர் அதுஅறிந் தறித்து ஓடுமினே.
தி. 4, 10, 6. [12-ம செய்யுள்.

பொது அறிக்கை.

பெரியோர்கள் யார்?

நன்னூற்றுறை நின்ருேர் உயர்ந்த மேலோர் வாசிட்டமும் கற்றபின் நிற்க அதற்குத்தக. — வள்ளுவர் குறளும் கூறின நூல்வழிசேர் குறிபேணுற், பெரியோ ரெனும் பேறு பெருரால் - பகவற்கீதையும் கூறுகின்றன. ஆகையால் நூல்ப்படி நடந்து அநுபவம் பெறவேண்டும்.

நானெனப தியாதினுற்கெடுமெனின்

மடிவறு பிறவியென்னு மரத்திர ளெனக்கிதென்னு
நெடியபல் பணைகணீட்டி நிரையமாங் காய்கள்காய்க்கு
முடிவறு துயராங்கார முளையாக விளையாநிற்கு
மிடியிலா ஞானத்தீயால் வேருெடும் வெந்துபோமே.
ஞா. வீமபாசதிடர்கதை 9.

மழுங்காத வைந்நுதிய சக்கர நல்வலத்தையாய்
தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே
மழுங்காத ஞானமே படையாக — மலருலகில்
தொழும்பாயார்க்கு அளித்தால் உன்சுடர்ச்சோதி மறையாதே.
தி. 3, 1, 9. [13-ம் செய்யுள்.

பொது அறிக்கை.

மகான்கள்யார்? பின்வருமாறு.

நானெனும் பொருள் காணுதார் ஞானவாகாயங்காணுர்
நானெனும் பொருளைக் கண்டோர் ஞானவாகாயமாவார்
நானெனு மகங்காரக்கார் ஞானவிண் மதியைமூடி
நானெனுப் பரமவாம் பனன்மலர் விரியாதன்றே.
ஞானவாசிட்டம், வீமபாசதிடர்கதை 8.

பிரமஞான உபதேசமுறை.

சரிதை கிரியாயோகப் பதத்தின் முற்றிச்
சாதனங்க ணிறைந்தவர்க்கே சாற்றல் வேண்டும்.
ஞா. தாசூரன் கதை 11.

அமரர்தொழப் படுவானை அனைத்துலகுக் கும்பிரானை
அமரமனத்தி னுள்யோகுபுணர்ந்து அவன்தன்னேடு ஒன்றுக
அமரத்துணிய வல்லார்களொழிய அல்லாதவ ரெல்லாம்
அமரநினைந் தெழுந்தாடி அலற்றுவதே கருமமே.
தி. 3, 5, 9· [14-ம் செய்யுள்.

புருடார்த்த சாதனங்கூறல்.

மேதமுறு கந்தற்ப நகரம்போ லறம்பொருள் வீடின்ப மெய்த
மேதகைய பலகோடி சாத்திரங்க ளவர்க்காக விதித்தான் வேதா.
ஞா. தாசூரன் 40.

முன்னம் திசைமுகனைத் தான்படைக்க மற்றவனும்
முன்னம் படைத்தனன் நான்மறைகள் அம்மறைதான். 10.

மன்னும் அறம் பொரு ளின்பம் வீடென்று உலகில்
நன்னெறி மேம்பட்டன நான் கன்றே. 11.

இவ்விரண்டு செய்யுளும் திருமங்கையாழ்வார் இயற்பா பெரிய திருமடல்.
15-ம் செய்யுள்.

மாயையைக் கெடுக்கு முபாயத்தை யறிவித்தல்.

பேதமுறு புந்தியே மாயையாகும் பெரிது வருந்தியு மிதனைப் போக்கல் வேண்டும், போதமுறு பேற்றினலன்றி மாயைப் பொருநதியின் கரைதோ ன்ருப் பொருந்தத் தோன்றி, லேதமறு மப்பதமே யிறவாவீடா மிம்மாயை பிறப்பிடமே தென்னவேண்டாஞ், சேதமுறக் கொல்வழி யேதென்று தேர்வாய் சிதைவுற்ரு லிதனியல்பு தெரியுமன்றே.

ஞா. தாசூரன் 18.

வினைவல் லிருளென்னும் முனைகள் வெருவிப்போம்
சுனைநன் மலரிட்டு நினைமின் நெடியானே. தி. 10, 5, 10.

நீர்நும தென்றிவை வேர்முதல் மாய்த்து இறை
சேர்மின் உயிர்க்கு அதன் நேர்நிறை யில்லே. தி. 1, 2, 3.

பற்றிலன் ஈசனும் முற்றவும் நின்றனன்
பற்றிலையாய் அவன் முற்றி லடங்கே. தி. 1, 2, 6.

16-ம் செய்யுள்.

சம்சார மித்தையெனல்.

வெங்காதற்பெரும்பாம்பு நெளிபுற்ருங் குடும்பபரம் வெறும்பொய்யென்றே
யிங் காசை யறநீக்கி யெல்லையிலாப் பரமபதத் திருந்து வாழ்வாய்
சிங்காரக் கந்தர்ப்ப நகரிருந்தென் சிதைவுற் றென்றீதோ நன்ருே
பங்கான மனைமக்கள் வாழ்ந்தாலென் கெட்டாலென் பாச மாயை.

ஞா. தாசூரன் 43.

என்னுடை நன்னுதல் நங்கைமீர்காள் யான் இனிச் செய்வதென், என் நெஞ்சு என்னை – நின்னிடையே னல்லேனென்று நீங்கிநேமியும் சங்கும் இருகைக்கொண்டு, – பன்னெடுஞ் சூழ்சுடர் ஞாயிற்ருேடு பால்நதியேந்தி ஓர்கோலநீல, – நன்னெடுங் குன்றம் வருவதொப்பான் நாள்மலர்ப்பாதம் அடைந்ததுவே. தி. 8, 2, 10.

17-ம் செய்யுள்.

சங்கற்பம் வருத்தமின்றிக் கெடுமெனல்.

அலர்வுறு பூவினைக் கச்கிற் கைவரு வருத்தமொன்றுள தாகுங்
கழறிய விதற்கது வேண்டா. ஞா. தாசூரன் 105.

அமரர்க்கு அரியானை தமர்கட்கு எளியானை
அமரத் தொழுவார்கட்கு அமரா வினைகளே.

தி. 10, 5, 9.

அந்தமில் லின்பத்து அழிவில் வீட்டை
எளிதில் பெறலாமே. (திருவாய்மொழி)

பத்துடை யடியவர்க் கெளியவன்
பிறர்களுக் கரிய வித்தகன். தி. 1, 3, 1.

18-ம் செய்யுள்.

சர்வம் பிரமமயமென்னும் ஞானம் வந்தால் வாசனை நசிக்குமெனல்.

உலகமெலாம் பிரமமெனும் பாவனையால்
அஞ்ஞான மொழிந்து போனல்
மலமுறு வாதனை தோன்றாக் கானலினீ
ருண்டென்று மதிப்பா ருண்டோ.

ஞா. சிகித்துவசன் கதை 95.

திடவிசும் பெரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவது மாய்அவை யவைதொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இடையுண்ட சுரனே. [தி. 1, 1, 7.

மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவைஎல்லாம் பிரானுருவே யென்று
உரைப்பெல்லாம் நின்னன்றி மற்றிலேன் கண்டாய். (திருவாய்மொழி)

19-ம் செய்யுள்.

மனது விடயசுகத்தை நீக்கிப் பிரமசுகத்தை யடையவேண்டுமெனல்.

எழுந் தெழுந்து சீறுகின்ற யிந்திரியப் பாம்புகளை யிதயந்தன்னி
லழுந்து விவேகத் தடியால் வச்சிரங்கொண் டிந்திரன் வெற்படர்வ தென்ன
விழுந்திட மோதுற வேண்டுஞ் சாந்தியினுற்சம மேவியிடர்தீர் நெஞ்ச
முழுந்துசுக வடிவாந் தர்பதநிலையைப் பெறுமிதுவே முத்தி யென்ன.

ஞா. சனகராஜன் கதை 14.

உடம்பினல் குறைவில்லா உயிர்பிரிந்த மலைத்துண்டம்
கிடந்தனபோல் துணிபலவா அசுரர்குழாம் துணித்துகந்த
தடம்புனல சடைமுடியன் தனியொருகூ றமர்ந்துறையும்
உடம்புடையான் கவராத உயிரினல் குறைவிலமே.

தி. 4, 8, 10. (20-ம் செய்யுள்)

பொது அறிக்கை.

ஞானப்பியாசிகள் யாவராயிருந்தபோதிலும் ஆசை குறைவுபடாதிருந்தால் ஞானப்பியாசத்திற்குத் தகுதியற்ற வர்களென்றும் அப்பியாசத்தில் தேர்ச்சிபெறவில்லை என்றும் அபத்தர்களென்றும் போலித்தன முடையவர்களென்றும் ஐயமறச் சொல்லி விடலா மென்றும், வேதங்கள் கூறுகின்றன. (பின்வருமாறு) அவா வருவினை யடக்குவான் பருவரலொடு பாவிப்பானரோ பொய்யே என்றும், துருப்படைத்தவ ருள்ளுணர் வியாவையும் விருப்பமுற்ற வெங்காமம் விழுங்குமால் என்றும் ஆதலாற் கடுங்காம மிறக்குவாய் என்றும் - கீதையில் பகவான் கூறி இருக்கிறார்.

சுகபோதந் தானுயிருக்கின்ற சமாதி யடைதல்.

பேதிக்கு மனமென்னும் பெரும்பகையை முழுவலியாற் பிளந்து வென்
றேன் - வாதித்த துயரெல்லா மாற்றினே னுபசாந்த வாழ்வு பெற்றேன்
சாதித்த விவேகமே யுனைவணங்கினே னென்று சனகர் கோமான்
சேதித்த மனவலை வெல்லா மொழித்துத் தானே சித்திரம் போனின்றான்.

ஞா. சனகர் 29.

மங்கவொட்டு உன்மா மாயை திருமா லிருஞ்சோலை மேய
நங்கள்கோனே யானேநீ யாகி என்னை யளித்தானே
பொங் கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம்
இங்குஇவ் வுயிரேய் பிரகிருதிமா னங்கார மனங்களே. தி. 10, 7, 10.

21-ம் செய்யுள்.

நிட்காமத்தா லுண்டான விசாரணையின் பலன்.

இலங்கிய சிந்தாமணியா மிதயமெனுஞ் சரக்கறையி லிருக்கும் போதங்
கலங்கலிலா விவேகியர்க்குக் கருதுபொருள் கற்பகம்போற் கணத்தினல்குந்
துலங்குவிசா ரம்படைத்துப் பேதமைபோய் நல்லறிவு தோன்றினோரை
விலங்குகவ சத்தோரை யம்புகள்போற் கரமாதி விகற்பந்தாக்கா.

ஞா. சனகர் 35.

அருள்பெறுவார் அடியார்தம் அடியனேற்கு ஆழியான்
அருள்தருவான் அமைகின்றான் அதுநமது விதிவகையே
இருள்தருமா ஞாலத்துள் இனிப்பிறவி யான்வேண்டேன்
மருளொழிநீ மடநெஞ்சே வாட்டாற்றா னடிவணங்கே, தி. 10, 6, 1.

அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில் அற்றிறை பற்றே.
தி. 1, 2, 5. (22-ம் செய்யுள்)

இச்சா த்யாகத்தால் சுக முதிக்குமெனல்.

இச்சையாம் விறகுமாண்டா லெண்ணமாம் வன்னிமாளு
நிச்சய மாகுந்தேயத் தியாகமா நெடுந்தேரேறி
மெச்சிய வுதாரக்கண்ணல் வேட்கையான் மிகவும்வாடுங்
கொச்சைஞா லத்தைநோக்கிக் குறைவற விருப்பாய்தீரா.

ஞா. மாவலி கதை 4.

யாவையும் யவரும்தானாய் அவரவர் சமயந்தோறும்
தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான் உணர்வின்மூர்த்தி
ஆவிசே ருயிரினுள்ளால் ஆதுமோர் பற்றிலாத
பாவனை யதனைக்கூடில் அவனையுங் கூடலாமே. தி. 3, 4, 10.
23-ம் செய்யுள்.

மாயையாகிய மந்திரியை வெல்லுமுபாயங் கூறல்.

விளிவருந் திறலந்த மந்திரி யந்தவேந்தா
லெளிது வென்றிடில் வணங்குறு மிவ்வகையின்றே
லளிய மேருவை யசைப்பினு மசைப்பரிதாகு
மொளிகளுக புந்தியினலால் வெலப்படா னெருங்கே.
ஞா. மாவலி கதை 31.

மாசூணச் சுடருடம்பாய் மலராது குவியாது
மாசூண ஞானமாய் முழுதுமாய் முழுதியன்றாய்
மாசூண வான்கோலத்து அமரர்கோன் வழிப்பட்டால்
மாசூண உனபாதம் மலர்ச்சோதி மழுங்காதே.
தி. 3, 1, 8. (24-ம் செய்யுள்)

ஐக்ய வஸ்துவான தன்னைத் தரிசித்தல்.

நானே நீயாய் நீனைய் ஞானவடிவாய் முடிவின்றித்
தானேயாகி யண்டத்தின் றலையாய்ப் பரம தத்துவமாங்
கோனேயுன்னைத் தொழுகின்றேன் கொண்டன் மறையா நிறைமதிபோ
லூனேர் நினைவுகளின்மறையா வொளியே முருவா யுனைப்பணிகேன்.
ஞா. பிரகலாதன் கதை 38.

யானு நீதானே யாவதோ மெய்யே அருநரக வையுநீயானல்
வானுய ரின்பமெய்திலென் மற்றை நரகமே யெய்திலென் எனிலும்
யானும்நீ தானுய்த் தெளிதொறும் நன்றும் அஞ்சுவன் நரகம்நானடைதல்
வானுய ரின்பம்மன்னி வீற்றிருந்தாய் அருளு நின்தாள்களை எனக்கே.

தி. 8, 1, 9. [25-ம் செய்யுள்.

பொது அறிவிப்பு.

தள்ளுதல் தத்துவத்தை தன்னையே அடைதல் வேண்டும் கொள்ளு வாய்ஞான யோகம் அநுபவானந்தா என்று விலக்ஷணனந்த பரமாத்வும், நல்லான் ஞான யோகியே நீயவை நண்ணுவாய் என்றும், ஞானி ஒருவன் தான் காதலினுகிய பவங்களி னெய்தான் என்றும் கிருஷ்ணபரமாத்மாவும் கூறி இருக்கிருர்கள்.

சமாதியனுபவ முரைத்தல்.

மேனியிற் புறத்தி னுள்ளின் மேலொடு கீழிற்றிக்கில்
வானில் வையகத்தி லெங்குநா னன்றி மற்ருென் றில்லை
யானிலா விடமுமில்லை யென திடத்தி லாதுமில்லை
தானிகழ் பொருள்வே றில்லை சச்சிதா நந்தமென்ருன்.

ஞா. கசன் கதை 20.

கடல்ஞாலம் செய்தேனும் யானே யென்னும்
கடல்ஞால மாவேனும் யானே யென்னும்
கடல்ஞாலம் கொண்டேனும் யானே யென்னும்
கடல்ஞாலம் கீண்டேனும் யானே யென்னும்
கடல்ஞாலம் உண்டேனும் யானே யென்னும்
கடல்ஞாலத் தீசன் வந்தேறக் கொலோ
கடல்ஞாலத் தீர்க்குஇவை யென் சொல்லுகேன்
கடல்ஞாலத்து என்மகள் கற்கின் றவே.

தி. 5, 6, 1.

இத்திருவாய்மொழி 11-யும் பிரபந்தத்தில் பார்க்க.

26-ம் செய்யுள்.

மாயையானது அனுபமில்லாதவர்களை வருத்துமென்றறிவித்தல்.

இவ்வகையே யிம்மாயை யறநெடிதாய் வெலற்கரிதா யேறித் தாழ்ந்து
வெவ்வியவா மோகங்கள் விளைவித்துப் பரமத்தின் மேவி நிற்கு
மவ்வகையா லுரைக்கின்றே ணநவரதஞ் சொரூபத்தை யடையாதாரைப்
பவ்வமென வருந்துயரின் மூழ்கிவிக்கு மிம்மாயைப் பண்புதானே.

ஞா. உத்தாலகன் கதை 1.

முனியே! நான்முகனே முக்கண் ணப்பா என் பொல்லாக்
கனிவாய்த் தாமரைக் கண்கரு மாணிக்கமே என்களவா
தனியே ஞருயிரே என் தலைமிசையாய் வந்திட்டு
இனிநான் போகலொட்டேன் ஒன்றும் மாயஞ் செய்யேல் என்னையே.

தி. 10, 10, 1.

தணியும் பொழுதில்லைநீ ரணங்காடுதிர் அன்னைமீர்
பிணியும் ஒழிகின்றதில்லை பெருகும் இதுவல்லால்
மணியி னணிநிற மாயன் தமரடி நீறுகொண்டு
அணிய முயலின் மற்றில்லைகண்டீர் இவ் வணங்குக்கே.

தி. 4, 6, 6.

சுத்தத்தைப் பார்த்தால் மாயை இறந்துவிடு மென்பதை அறிவிப்பதோடு, சுத்தத்திற்கு முயற்சிசெய்ய குருமொழி அவசியமென்பதை கீழ்செய்யுளில் 4, 6, 6-ல் கூறுகின்றது. [27-ம் செய்யுள்.

எல்லாச் சாதனங்களைக்காட்டிலும் குருவே முக்கியமானது.

மயலின்மை சாதனை நூற் பொருட்போதங் குருயமமாம் வழிகளாலே
யுயர்பதவி பெறலாகு மன்றியுணர் வொன்றினு லுறுதற்காமா
லியலுப தேசம்பெற்றுக் கூறியதாய்க் களங்கமிலா திருக்குமாகில்
வியனுறுசா தனமுழுது மிலதேனும் புந்தியினுல் வீடுகூடும்.

ஞா. சுரகு கதை 2.

வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்
பாதம் பணிந்து இவள்நோ யிதுதீர்த்துக் கொள்ளாதுபோய்
ஏதம் பறைந்து அல்லசெய்து கள்ளூடு கலாய்த்தூய்
கீத முழவிட்டு நீரணங் காடுதல் கீழ்மையே.

தி. 4, 6, 8. [28-ம் செய்யுள்.

தேவநிச்சயம் விசாரிக்க வஃது சுயஞ்சித்தே யெனப் போதித்தல்.

தீவினையெல்லா மறுத்து மங்கல மெல்லா முதவுந் தேவபூசை
யாவதெனக் கேட்டலுமே யருள்செய்வான் றெய்வந்தா னியாதென்றேதிற்
கேவலமே வரியல்ல வரனல்ல பூதவுடற் கிடைத்ததல்ல
வோவுமன மன்றடியு முடிவுமிலாச் செயப்படா வுணர்வே தெய்வம்.

ஞா. தேவபூசை கதை 20.

யானும் தானா யொழிந்தானை யாதும் யவர்க்கும் முன்னோனை
தானும் சிவனும் பிரமனுமாகிப் பணைத்த தனிமுதலை
தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்தித்து, என்
ஊனில் உயிரில் உணர்வினில் நின்ற ஒன்றை உணர்ந்தேனே.

தி. 8, 8, 4.

இத் திருவாய்மொழி 11-யும், பிரபந்தத்தில் பார்க்க. [29-ம் செய்யுள்.

பொது அறிவிப்பு.

கடைசிப் பிறவியில் ஞானம் தானே உதிக்குமென்று கூறுவது யாதெனில்:—

இனிப் பிறவா முடிவான பிறப்பிலே மெய்ஞான மெளிதில் தோன்றும். ஞானவாசிட்டமும், தண்டுதலின்றி முன் தானே தலைப்படும் என்று பகவத் கீதையும் கூறுகின்றது.

பிரமத்துக் கிரண்டுவடிவ நிருபித்தல்.

சங்காழி பயில்கரத்தை முதலான வங்கஞ்சா மானியந்தான்
மங்காம லடிமுடிவற் றொன்றுய வடிவுபர வடிவமாகு
மிங்கான பிரமமென பரமமென விசைப்பதெலா மிந்தரூபஞ்
சிங்காம லிதுதனைநீ தெளிவளவு நாலுபுயத் தேவையேத்து.

ஞா. அர்ச்சுனன் கதை 17.

உணர்ந் துணர்ந் திழிந்தகன்று உனர்ந்துரு வியந்த இந்நிலைமை
உணர்ந் துணர்ந் துணரிலும் இறைநிலை உணர்வரிது உயிர்காள்
உணர்ந் துணர்ந் துரைத் துரைத்து அரியய னரனென்னும் இவரை
உணர்ந் துணர்ந் துரைத் துரைத்து இறைஞ்சுமின் மனம் பட்டதொன்றே.

தி. 1, 3, 6. [30-ம் செய்யுள்.

சகுணமே நிர்க்குணம். நிர்க்குணமே சகுணம் என்பதை உணருங்கள். வேறு வேறாகக் கருதாதீர்கள்.

சம்சார நீக்க மறிவிக்குநிமித்தஞ் சங்கத் தியாகங்கூறல்.

சங்கமடையாப் பொருளுண்டாஞ் சங்கமடையா வாபத்தாஞ்
சங்கமடையா வாசைவருஞ் சங்கமடையாப் பிறப்புண்டாஞ்
சங்கமறுத்தல் வீடென்பர் சங்கமறுத்தல் பிறப்பறுத்தல்
சங்கமறுத்துப் பொருள்களினீ தனிச்சீவனின் முத்தியைப்பெறுவாய்.

ஞா. உபசாந்திப் பிரகரணம் 67.

பயிலும் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக் கண்ணனை
பயில இனியநம் பாற்கடல்சேர்ந்த பரமனை
பயிலும் திருவுடையார் யவரேலும் அவர் கண்டீர்
பயிலும் பிறப்பிடைதோறு எம்மை யாளும் பரமரே. தி. 3, 7, 1.

31-ம் செய்யுள்.

மேற் செய்யுளுக்குப் பிரமாணம் :—

தனிமாப்புகழே எஞ்ஞான்றும் நிற்கும்படியாய்த் தான் தோன்றி - முனிமாப் பிரமமுதல் வித்தாய் உலக மூன்றும் முளைப்பித்த-தனிமாத் தெய்வத் தளிரடிக்கீழ் புகுதலன்றி அவனடியார் - நனிமாக் கலவி யின்பமே நாளும் வாய்க்க நங்கட்கே. தி. 8, 10, 7 இத் திருவாய்மொழி 11-யும் நாலாயிரப் பிரபந்தத்தில் பார்க்க.

மனமிறக்க ஏதாவதொன்றைச் சாதிக்கவேண்டும்.

ஆதாரா தேயம்போலா மதிலொன் றிறக்கி லயலதும்போ
மோதாநின்ற விவைமாயி லுயர்ந்த வீடுமுத விடுமான்
மீதாகிய தன்பரிசயத்தால் வெளியாய் நினைவு போமளவு
மேதாகிலு மோர் தத்துவத்தி லிருகவேண்டும் பாவனையே.

ஞா. வேதாள கதை 12.

வணங்கும் துறைகள் பலபல வாக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல வாக்கி அவையவை தோறு
அணங்கும் பலபல வாக்கி நின் மூர்த்தி பரப்பிவைத்தாய்
இணங்கு நின்னோரை யில்லாய் நின்கண் வேட்கை யெழுவிப்பனே.

நம்மாழ்வார் இயற்பா. திருவிருத்தம் 96-ம் செய்யுள்.

32-ம் செய்யுள்.

இச்சையே பந்தமதனிவர்த்தியே முத்தியெனல்.

பேசுமிதுதா னிற்பளவும் பிறப்பா நச்சுவிடு சிகைதா
ஞசமடையா திராகவனே ஞானச்சுருக்க மிதுகேளாய்
பாசமுற வீதுண்டாக வென்று படருமனந்தானே
யேசு பிறவியிம் மனத்தினிறவே முத்தி யிவ்வளவே.

ஞா. நிருவாணப் பிரகரணம் 53.

மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம் மாநிலத் தெவ்வுயிர்க்கும்
சிற்றவேண்டா சிந்திப்பே யமையும் கண்டீர்கள் அந்தோ
குற்றமன்று எங்கள் பெற்றத்தாயன் வடமதுரைப் பிறந்தான்
குற்றமில் சீர்கற்று வைகல வாழ்தல்கண்டீர் குணமே. தி. 9, 1, 7.

33-ம் செய்யுள்.

பொது அறிவிப்பு.

ஞானப்பியாசிகள் ஆத்ம ஞானத்தை குறை வறப் பெறவேண்டிய துரிய துரியாதீத மென்னும் 6-வது, 7-வது ஞான பூமிகளைப்பற்றிச் சந்தேகம் தெளிய விருப்பமுடையவர்க ளெல்லோரும் திருச்சி ஜில்லா முசிரி தாலூகா கொளக்குடி வேதாந்த சபையில் பௌர்ணமி தினத்திலாவது, மற்ற நாட்களிலாவது நேரில்வந்து கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென்று அடியேனால் கூறப்பட்டது.

தனுமானசியாகிய மூன்ரும்பூமி அப்பியாசி இறந்துவிட்டால் கதியாதென வினவுதல்.

அருந்து போகமாய் தவினை ளள்வில் பண்டை யிருவினையும்
பொருந்த மாயுமப் போது புவியிற் பிறப்பர் யோகிகடாம்
திருந்து செல்வங் குணஞ் சுத்தஞ் சிறந்தநல்லோர் மனைப்பிறந்து
வருந்தி முன்னம் பழகுதலால் வழுவா யோக நெறிநிற்பர்.

ஞா. நிருவாணப் பிரகரணம் 34.

அவா வறச்சூழ் அரியை அயனை அரனை அலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன
அவாவி லந்தாதி களால் இவை யாயிரமும் முடிந்த
அவாவி லந்தாதி இப்பத்து அறிந்தார் பிறந்தார் உயர்ந்தே.

தி. 10, 10, 11. [34-ம் செய்யுள்.

இச்சை அற்பமுங் கூடாதெனல்.

அற்ப முனக்கொன்றி னிதாகி லதனாற் பிறப்பி லகப்பட்டாய்
பொற்பவுனக் கொன்றினு மினிமை பூணுதென்னிற் பிறப்பகன்ருய்
நிற்ப நடப்பப் பொருட் டிரளி னினக்குத் திரண முதலாகத்
தற்பமுறு பொன்முடிவாகச் சற்று மினிமை யுறவேண்டாம்.

ஞா. மானுவேடன் கதை 10.

இடையில்லை யான்வளர்த்த கிளிகாள் பூவைகாள் குயில்காள் மயில்காள் உடையநம் மாமையும் சங்கும் நெஞ்சும் ஒன்றுமொழிய வொட்டாது கொண்டான், - அடையும் வைகுந்தமும் பாற்கடலும் அஞ்சன வெற்புமவை நணிய, - கடையறப் பாசங்கள் விட்ட பின்னையன்றி அவன் அவை காண் கொடானே. தி. 8, 2, 8.

வீடுமின் முற்றவும் வீடுசெய்து உம்முயிர்
வீடுடை யானிடை வீடு செய்ம்மினே. தி. 1, 2, 1.

[35.ம் செய்யுள்.

குரு பரம்பரையை யறிவித்தல்.

தேங்கமலத் தயனுரைத்த மொழிகேளென்னச் செப்பிய காரணமே தென் றிராமன் கேட்ப - வோங்குமுனி யுரைசெய்வான் முடிவற்றெங்கு முளதாகி யனைத்தினுக்கு முறையுளாகி - வீங்கு பொருள்களில் விளக்கமாகி மேவுமெய்ஞ் ஞான விண்ணின்று விண்டுவந்தான் - ஆங்கவன்றன் மனக் கமலத் தயனுண்டாகி அகிலமன விகற்பம்போ லளித்தானன்றே.

ஞா. முமூட்சுப்பிரகரணம் 6.

உம்பரந்தண் பாழேயோ அதனுள் மிசைநீயேயோ
அம்பரநற் சோதி அதனுள் பிரமன் அரன்நீ
உம்பரும் யாதவரும்படைத்த முனிவன் அவன்நீ
எம்பரம் சாதிக்கலுற்று என்னைப்போர விட்டிட்டாயே.

தி. 10, 10, 4.

மேவித் தொழும் பிரமன் சிவன் இந்திர னுதிக்கெல்லாம்
நாவிக் கமல முதற்கிழங்கே உம்பரந்ததுவே.

தி. 10, 10, 3. [36-ம் செய்யுள்.

இதன்கருத்து :— குருவென்பது சீவன் முத்தர்களும் சுத்தப் பிர்மமுமே வேறன்று. பிர்மத்தின் வார்சுகள் மும்மூர்த்தி. மும்மூர்த்திகளில் முதல் வார்சு ஸ்ரீமந் நாராயணன். சமய சம்பிரதாய நூல்கள் கூறவில்லை. பொதுவாகிய ஞான நூல்கள் கூறுகின்றன. மைவிடாதெழு நீலகண்ட குருவே - விஷ்ணு வடிவான ஞான குருவே - மறையோதும் நான்முகக் குருவே-என்று தாயுமானவரும், எங்நாட் கண்ணியில் குருமரபின் வணக்கம், அடியார் வணக்கம் என்னுமிடத்தில் தாயுமானவரும், (சுகர் கைவல்யம்) (இத்தகைமை யுடைவர்க்கு குருவாவாரென்) என்னும் செய்யுளில் சுகப்பிரம்ம ரிஷியும் கூறி இருக்கிறார்கள்.

ஆன்மாவை யறிந்தவைவற் றிருந்தவென்னை யயன்பார்த்து நாமேநின் னறிவைமாற்றி - யூன்மாயைப் பின்பொழித்தே முயிரெலாநின் னுபதேசம் பெற்றுய்ய வுபாயஞ் செய்தோன் - மேன்மாயும் வினைநிறைந்த சம்புத்தீவின் மேவிய பாரதவருடம் விரைவின் மேவித் - தான்மாளாக் கிரியினர்க்குக் கிரியைச்சாற்றி சாதனமுள் ளோர்க்கு குணர்வைக் கூறு றென்றான்.

ஞா. முமூட்சுப் பிரகரணம் 9.

183317

வார்த்தை யறிபவர் மாயவற் காளன்றி யாவரோ
போர்த்த பிறப்பொடு நோயொடு மூப்பொடு இறப்பிவை
பேர்த்து பெருந்துன்பம் வேரற நீக்கித்தன் தாளின்கீழ்ச்
சேர்த்து அவன்செய்யும் சேமத்தை எண்ணித் தெளி
[வுற்றே.

தி. 7, 5, 10. [37-ம் செய்யுள்.

சற்கருமத்தையுநீக்கி ஞான திருஷ்டியா லிச்சாத் தியாகம் செய்யவேண்டு மெனல்.

தவமகந் தீர்த்தஞ் சேவை யருச்சனை தானமாதி
யவமயக்கத் தானீனுள் விலங்குபோ லவத்தர் வாழ்வர்
பவமுறு மிவற்றை விட்டு பரிசுத்த பரம போதங்
கவரறப் பற்றி யெல்லாக் காதலு நீக்கி நிற்பாய்.

ஞா. உபசாந்திப் பிரகரணம் 59.

ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாராணன் நான்முகன் அரனென்னும் இவரை
ஒன்றநும் மனத்துவைத்து உள்ளிநும் இருபசை யறுத்து
நன்றென நலஞ்செய்வது அவனிடை நம்முடைநாளே.

தி. 1, 3, 7. [38-ம் செய்யுள்.

விதேக முத்தனுதல்.

அனகபத முற்றுடல் புளகமாறி நெடுநாளிற் கரைந்து
மனமும் பிறப்பின் மயக்கமும்போய் மகாசத்துவ மாயோவியம்போற்
கனமில் ககனத்து வாமதிபோற் கதியிற் சின்ன ளினிற்சுவறி
யினன தொழியான் மரப்பசைக ளிறப்புப்போலா யிறப்புற்றான்.

ஞா. உத்தாலகன் கதை 79.

நன்றாய் ஞானங் கடந்துபோய் நல்லிந்திரிய மெல்லா மீர்த்து
ஒன்றாய்க் கிடந்தவரும் பெரும் பாழ்உலப்பி லதனை உணர்ந் துணர்ந்து
சென்றாங் கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே அப்போதே வீடு அதுவேவீடு வீடாமே. தி. 8, 8, 6.
[39-ம் செய்யுள்.

இத் திருவாய்மொழி 11-பாட்டையும் நாலாயிர பிரபந்தத்தில் பாருங்கள்.

சூடாலையே குரு. குருசெய்த நன்றிக்குக் கைமாறுளவோவென வினவுதல்.

மடியின்மே லந்த வஞ்சியை வைத்தவ னுரைப்பான்
முடிவில் பேரிருட் குகைநிகர் மோக நின்றென்னை
நெடிய புந்தியா லுய்த்தனை யுனக்கெவர் நிகரோ
கொடி மருங்குலா யியற்று கைம்மாறு மொன்றுளவோ.

ஞா. சிகித்துவசன் கதை 229.

ஆரெனக்கு நின்பாதமே சரணுகத் தந்தொழிந்தாய்
உனக்குஓர் கைம்மாறு நானொன்றிலேன் எனதாவியும்உனதே
சேறுகொள் கரும்பும் பெருஞ் செந்நெலும் மலிதண்சிரீவர மங்கை
நாறுபூந் தண் துழாய் முடியாய் தெய்வ நாயகனே. தி. 5, 7, 10.

[40-ம் செய்யுள்.

பொது அறிவிப்பு.

தெளிபவர் உணர்வொன்றே தெளி விலர்
உணர் வோதிற் றளிர்நிகர் பலவாகும் — என்றும்.
தானுன, ஞானிக்கு இருவினைகளும் வீடு — என்றும்
கீதையில் பகவான் கூறி இருக்கிறுர்.

ஆத்ம விசார விலக்கணங் கூறல்.

ஊனமிலா ஞானநூல் விசாரத்தாலே யுயர்வீடு நண்ணுமென லுண்மையன்றே - தானறியு மனுபூதி ஞான நன்னூற் சற்குருவிம் மூவகையுந் தம்மிலொத்தே - யானல்வகை யியற்றில்விடா தான்மாத்தோன்று மற்பவறி வினர்கற்ற வரியமெய்ந்நூ - லீனமுறு மடமைதரு மிதுபோன் மற்ற வெந்தநூல்களு மடமை யியற்றுதன்றே.

ஞா. முமூட்சுப் பிரகரணம் 14.

வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல்செல்ல வீவில்சீர்
ஆற்றல்மிக் காளும் அம்மானை வெம்மா பிளந்தான் தன்னை
போற்றியென்றே கைகளாரத் தொழுது சொல்மாலைகள்
ஏற்றநோற் றேற்குஇனி யென்னகுறை எழுமையுமே.

தி. 4, 5, 1. [41-ம் செய்யுள்.

சாது சங்கத்தின் பலன்கூறல்.

அறக்குறைவை நிறைவாக்குஞ் சம்பத்தாக்கு மாபத்தைச் சுபமாக்கும சுபந்தன்னை - சிறக்குமுயர்ந் தவர்கூட்ட மென்னும் கங்கைச் சீதநீராடினர்க்குச் செந்தீவேள்வி - யிறக்கரிய தவம்தானந் தீர்த்தம்வேண்டா மிடர்பந்த மறுத் தெவர்க்குமினியோராகிப் - பிறப்பெனும் வேலைப் புணையாமுணர்வு சான்ற பெரியோரை யெவ்வகையும் பேணவேண்டும்.

ஞா. முமூட்சுப் பிரகரணம் 20.

வாய்க்க தமியேற்கு ஊழிதோ றூழியூழி மாகாயம்
பூக்கள்மேனி நான்குதோள் பொன் னாழிக்கை என்னம்மான்
நீக்கமில்லா அடியார்தம் அடியா ரடியா ரடியார்எங்
கோக்கள் அவர்க்கே குடிகளாய்ச் செல்லும் நல்ல கோட்பாடே.

தி. 8, 10, 10. [42-ம் செய்யுள்.

அஸ்டாக்ஷரத்தின் பெருமை யுணர்தல்.

நயந்ததெல்லா மெளி தருளு நாராயணய நமவென்னு
முயர்ந்ததிரு மந்திரமென்ற னுளத்தில் விண்ணில் மாருதம்போற்
பெயர்ந்து நீங்கா துள்ளுறைக பேணியரி யைப்பூசிப்போ
ரியைந்தவரி தாமப்பூசை யியற்றிற் பலனு மலதில்லை.

ஞா. பிரகலாதன் கதை 5.

கொள்ளும் பயனில்லை குப்பை கிளர்த்தன்ன செல்வத்தை
வள்ளல் புகழ்ந்துநும் வாய்மை யிழக்கும் புலவீர்காள்
கொள்ளக் குறைவிலன் வேண்டிற் றெல்லாம் தரும்கோதில், என்
வள்ளல்மணி வண்ணன் தன்னைக் கவிசொல்ல வம்மினோ.

தி. 3, 9, 5. [43-ம் செய்யுள்.

பொது அறிவிப்பு.

நிறையறிவின் சமமான நோக்கினரைச் சேவித்து
நிரந் தரித்துப் பொறையுடனே வினவினல்
முத்திபெறும் நுண்ணறிவு பொருந்தும் - ஞானமிக
நன்றென்றே யயன்முதலா நல்லோர்கள் நவிலாநிற்க —

என்று வாசிட்டமும்,

தொன்மையாக முன்சொன்ன தொகைக் கெலாம்
நன்மையா மிகற்பாலது ஞானமே.
ஞானமாமிது நல்லவர் கேட்டிட - என்று பகவத் கீதையும் கூறுகின்றது.

சாந்தகுணத்தோடு சத்துக்களைச்சேர்ந்து முத்தியையடையுமரபு கூறல்.

நாட்டினியல் புவழுவா மனட்டோர்க் கிதமா நற்பொருள்க
ளீட்டிமுன்ன மதனலே யினிய குணத்தி லுயர்ந்தோரைக்
கூட்டியவரா னிராசையினைக் கூடியதனல் விசாரத்தைத்
தீட்டியதனன் மெய்ஞ்ஞானந் தெளிந்தான்முத்தி சித்திக்கும்.

ஞா. மாவலி கதை 39.

நெடுமாற் கடிமை செய்வேன்போல் அவனைக் கருதவஞ்சித்து
தடுமாற்றற்ற தீக்கதிகள் முற்றும் தவிர்ந்த சதிர்நினைந்தால்
கொடுமா வினையேன் அவனடியா ரடியேகூடும் இதுவல்லால்
விடுமா றென்பதென் அந்தோ வியன்மூ வுலகு பெறினுமே.

தி. 8, 10, 1. [44-ம் செய்யுள்.

அபேதானுபவ முரைத்தல்.

பொன்னில் வேற்றுமையன்று கேயூரமென நினையிற் பொன்னென்றேயா
மின்னதே நிருவிகற்ப மென்பரா லிரவிவெயி லென்றுநாடின்
மின்னு கதிரிரவிக்கு வேறுபோ லாங்கண்டாய் விவிதமாகத்
துன்னுநா னாத்துவம் விட்டறிவதிலா நல்லறிவிற் துணிந்து நிற்பாய்.

ஞா. விரதசூயை கதை 2.

பலபலவே ஆபரணம் பேரும் பலபலவே
பலபலவே சோதிவடிவு பண்பு எண்ணில்
பலபல கண்டுண்டு கேட்டுற்று மோந்தின்பம்
பலபலவே ஞானமும் பாம்பணைமே லாற்கேயோ.

தி. 2, 5, 6. [45-ம் செய்யுள்.

பொது அறிக்கை.

சீவன்முத்தர் சிறப்பு.

கைலையொடு திருமால் பதமும் யாண் வேண்டேன் றிமிரம்மருளு மகற்றியவுன் - அருளாற் பதமும் வேண்டு மெனக் களிப்பா யளிப்பா யனுதினமே - என்று விடோபா சுவாமியும், (சீவன் முத்தரைச் சேவித்தோர் சிவ னய நெடுமா லென்னும் மூவருமகிழநோன்பு முடித்துப் பாவன மானுறென்று) கைவல்யமும் கூறுகின்றன.

இந்நூலிலும் 47-வது செய்யுளைப் பாருங்கள்.

பிரமத்தை வணங்குதல்.

சகல சங்கற்பப் பலனுய்ச் சகல வொளிக்கு மொளியாகிச்
சகலமான கொள்கையுந்தீர் தனிச் சிற்பரத்தை யேத்துகிற்பாஞ்
சகல சங்கற்பமு மற்றுச் சகல சந்தோடமு மற்றுச்
சகல வாரம்பமு மற்ற தனிச் சிற்பரத்தை யேத்துகிற்பாம்.

ஞா. புசுண்டன் கதை 28.

நின்றவொன்றை யுணர்ந்தேனுக்கு அதனுள் நேர்மை அதுவிது வென்று
ஒன்றும் ஒருவர்க் குணரலாகாது உணர்ந்தும் மேலும் காண்பரிது
சென்று சென்று பரம்பரமாய் யாதுமின்றித் தேய்ந்தன்று
நன்று தீதென் றறிவரிதாய் நன்றாய் ஞானம் கடந்ததே.

தி. 8, 8, 5. [46-ம் செய்யுள்.

விசாரணையால் மேன்மையாகிய பரவஸ்துவை அடையவேண்டும்.

ஆன்றவம்மனம் பூர்ணத்தை யடைந்து பூரணவெண் டிங்கள்
போன்றுற விளங்கு மிந்தநிலையிலே பொலிவுற் றோர்கண்
மூன்று மூர்த்திகளாந்தேவ முதல்வர்க்குங் கருணைசெய்வ
ரூன்றிய விசாரத்தாலே யுயர்பொரு ளெய்தவேண்டும்.

ஞா. தாமவியாளகடர் கதை 5.

திருமால் நான்முகன் செஞ்சடையா னென்றிவர்கள், எம்
பெருமான் தன்மையை யாரறிகிற்பார் பேசியென்
ஒருமா முதல்வா ஊழிப்பிரான் என்னையாளுடை
கருமா மேனியன் என்பன் என்காதல் கலக்கவே.

தி. 8, 3, 9. [47-ம் செய்யுள்.

பொது அறிக்கை.

தத்துவ சாஸ்திரங்களில் பகவற்கீதையில் மாத்திரம் சத்கர்மங்களென்னும் துவைதம் கலந்து கூறப்படுகிறது. வாசிட்டம், ரிபுகீதை, கைவல்யம், சுகர் கைவல்யம் முதலான சாஸ்திரங்கள் சத்கருமங்களை நீக்கிக் கூறுவதால் ஞானிகளுக்கு மாத்திரம் சம்மதமான நூல்கள் என்றும் பகவத்கீதை உபயவாதிகளுக்கும் சம்மதமான நூல் என்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். (எப்படியெனில்) — பகவற்கீதை 4-வது அத்தியாயம் 21-ம், ஞானவாசிட்டம் சிகித்துவசன் கதை 45-ம் செய்யுளையும் பாருங்கள்.

ஞானத்தால் தேகாபிமான நீக்கி நிற்றல்.

படிமுழு துழல்வா னோர்காற் பகைவர்க்குத் தான் முன்னீந்த
கடிநகர் புக்கா னெல்லாக் கரணமும் வென்றோன் சென்று
மடியிலா வமைச்சர் மற்றோர் மனையெலா மையமேற்றான்
முடியுடை யிவனைநோக்கி யிரங்கினர் முன்பு கண்டோர்.

ஞா. பகிரதன் கதை 25.

ஒரு நாயகமாய் ஓடவுலகுட னண்டவர்
கரு நாய்கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெரு நாடுகாண இம்மையிலே பிச்சைதாம்கொள்வர்
திரு நாரணன் தாள்காலம்பெறச் சிந்தித்துய்ம்மினோ.

தி. 4, 1, 1. [48-ம் செய்யுள்.

முத்தியடைவதற்கு சீவன்முத்தரைப் பூசிக்கவேண்டும்.

போற்ற வணங்கப் பூசிக்கப் புகழ வருந்திப் போய்க்காண
மாற்ற வுரியோ னெவனவன் வன்பிறவி யறுப்போர்க் கனவரதஞ்
சாற்று மகத்தாற் றீர்த்தத் தாற்றவத்தாற் றானத்தாற் கிட்டா
வீற்ற வறிவாற் பிறவியறுத் துயர்ந்தோன் பத்தி தரும்பயனே.

ஞா. இட்சுவாகு கதை 65.

புயன் மூவுலகு பெறினும்போய்த் தானே தானேயானாலும்
சயல் மேகம்போல் திருமேனி யம்மான் புனேபூங் கழலடிக்கீழ்
சயமே அடிமை தலைநின்றார் திருத் தாள்வணங்கி, இம்மையே
பயனே யின்பம் யான் பெற்றது உறுமோபாவி யேனுக்கே.

தி. 8, 10, 2. [49-ம் செய்யுள்.

மேற் செய்யுள்களுக்காகப் பிரமாணம் ஞானிகளௌனை மிக்கோர் என்று 2-வது அத்தியாயம், 43-ம் செய்யுளில் பகவற்கீதையில் பகவான் கூறி இருக்கிறார். நான் பிர்மம் என்பது சங்கரனுதியர் நிச்சயமே.

அஞ்ஞான திருஷ்டி நீங்குமுபாய மியாதெனின்.

பிறப்பெனு மாயைக்கரையதா யெங்கும் பிறிவறு பெரும்பொருடோன்றி
லிறப்புறு மாயைக் கிச்சையே வடிவா மிதனுடை நாசமேவீடு
சிறப்பில் சங்கற்பஞ் சிதைந்திடி விதுதான் றேய்ந்திடுஞ் சித்தெனும் சுதி
ரோன் - புறப்படி லிதய விசும்பில் வாதனையாம் பொங்கிருள் போமெனப்
புகல்வாம். [ஞா. உற்பத்திப் பிரகரணம் 19.

இவளைப் பெறும்பரிசு இவ்வணங் காடுதலன்றந்தோ
குவளைத்தடங்கண்ணும் கோவைச் செவ்வாயும் பயந்தனள்
கவளக் கடாக்களி றட்டபிரான் திருநாமத்தால்
தவளப் பொடிக்கொண்டு நீர்இட்டிடுமின் தணியுமே.

தி. 4, 6, 5. [50-ம் செய்யுள்.

மேற் செய்யுள்படி நடக்க விசாரனை முயற்சி.

மறப்பும் ஞானமும் நானென் றுணர்ந்திலன்
மறக்கு மென்று செந்தாமரைக் கண்ணொடு
மறப்பற என்னுள்ளே மன்னினன் தன்னை
மறப்பனோ இனியான் என் மணியையே.

தி. 1, 10, 10.

அனுபவவிலாசம் சொல்லுதல்.

கனமுறப் பெற்றேன் கேட்கக் காணவேண்டுவ தொன்றில்லை
யனவரதமு நிறைந்தே னயர்வற்றேன் பிறவி யற்றேன்.

ஞா. சிகித்துவசன் கதை 179.

ஆயர் கொழுந்தாய் அவரால் புடையுண்ணும்
மாயப் பிரானை என்மாணிக்கச் சோதியை
தூய அமுதைப் பருகிப் பருகிஎன்
மாயப் பிறவி மயர்வறுத் தேனே. [தி. 1, 7, 3.

யானொட்டி என்னுள் இருத்துவ மென்றிலன்
தானொட்டி வந்துஎன் தனிநெஞ்சை வஞ்சித்து
ஊனொட்டி நின்று என்னுயிரில் கலந்துஇயல்
வானொட்டு மோ இனி யென்னை நெகிழ்க்கவே.
தி. 1, 7, 7. [51-ம் செய்யுள்.

பொது அறிவிப்பு.

சீவன்முத்தர் சுபாவம்.

நன்று தீதென் றெண்ணார் நடுவான சீவன்முத்தர்-கைவல்யமும், நன்று தீதென் றுணர்வரிதாய் நன்ருய் ஞானம் கடந்ததே - திருவாய்மொழியும், இழிவுய ரிரண்டு மென்னார் வாடுதல் பூரித்தலின்றி, வேண்டல் வேண்டாமை யின்றி, போற்றினர் போற்ருதாறின்றி, காதற் தோழன் கடும்பகைஞர் இன்றி இத்தகைய குணத்தோடு தானென நிலையில் இவ் வுலகத்தில் சஞ்சரிப்பார்களென்று இன்னும் பல சாஸ்திரங்களும் கூறுகின்றன. சத்துக்களும் சொல்லுவார்கள்.

பிரமபாவனையா லகம்பாவநீங்கி விஸ்ராந்தி யுண்டாமெனல்.

அலர் கசக்குமுன் னிமைக்குமு னகங்கர மகற்றுத லெளிதாகும்
பல வுரைப்பதென் னேகமா யநந்தமாய்ப் பரம சித்தேயாகிச்
குலவ சுத்தமாய் விண்ணிலும் நுண்ணிதாங் குறைவிலாப் பொருணிற்குஞ்
சலன மற்றதைப் பாவனை செய்துப சாந்தனயிடர் தீர்வாய்.

ஞா. கசன் கதை 9.

எளிவரும் இயல்வினன் நிலைவரம்பில பல பிறப்பாய்
ஒழிவறு முழுநலம் முதலில கேடில வீடாம்
தெளிதரு நிலைமையது ஒழிவிலன் முழுவதும் இறையோன்
அளிவரும் அருளினோடு அகத்தனன் புறத்தனன் அமைந்தே.
தி. 1, 3, 2. [52-ம் செய்யுள்.

அகம்பாவ மோர் பொருளன்றாதலா லஃதைப் பற்றுதல் விடுதல் கூடாவெனல்.

பொய்யதா முயற் கொம்பினைப் பற்றவும் போக்கவு நினைப்பாரா
ரையனே பரபோத பூரணத்திலே யயலொன்று வருமாறென்
பொய்யதாகிய வநேக பாவனையினைப் பொருந்தல் புன்பிறப்பாகு
மையமின்றிய வேக பாவனையி லழுந்துதல் பவந்தீர்தல்.
ஞா. கசன் 13.

எஞ்ஞான்று நாம்இருந்து இருந்து இரங்கிநெஞ்சே
மெய்ஞ்ஞானமின்றி வினையியல் பிறப் பழுந்தி
எஞ்ஞான்றும் எங்கும் ஒழிவற நிறைந்துநின்ற
மெய்ஞ்ஞானச் சொதிக் கண்ணனை மேவுதுமே. தி. 3, 2, 7.

உதவிக் கைம்மாறு என்னுயிர்என்ன உற்றென்னில்
அதுவும் மற்றாங்கவன் தன்னது என்னால்தன்னை
பதவிய இன்கவி பாடிய அப்பனுக்கு
எதுவும் ஒன்றுமில்லை செய்வது இங்கு மங்கே.
தி. 7, 9, 10. [53-ம் செய்யுள்.

பரபிர்மத்தின் வடிவம்.

கருத்ததனாற் சங்கற்ப விகற்ப மெல்லாங்
கைவிடுதல் கைக்கொள்ளப் படுவ தாகுந்
திருத்தமுறுந் தன்விரிவுங் குவிவு தானுஞ்
சிருட்டியுங் கற்பமுமாகுந் திரள் வேதாந்தத்
தருத்தமுறு வாக்கியத்தி னிட்டை யாகு
மவ்வேத வாக்கியத்துக் கயனு மாகு
முருத்திகழு முள்ளதில திரண்டினுக்கு
முள்ளாகு மவை யிரண்டி னுருவமாகும்.
ஞா. கற்கடி கதை 41.

ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்
காணலு மாகான் உளனல்லன் இல்லையல்லன்
பேணுங்கால் பேணும் உருவாகும் அல்லனுமாம்
கோனை பெரிதுடைத்து எம்பெம்மானைக் கூறுதலே.
தி. 2, 5, 10.

நிறமுயர் கோலமும் பேரும் உருவும் இவை யிவையென்று
அறமுயல் ஞானச் சமயிகள் பேசிலும் அங்கங் கெல்லாம்
உறவுயர் ஞானச் சுடர்விளக் காய்நின்ற தன்றி ஒன்றும்
பெற முயன்று ரில்லையால் எம் பிரான் பெருமையையே.
இயற்பா திருவிருத்தம். நம்மாழ்வார் 44.
54-ம் செய்யுள்.

ஞானிக ளிருக்குமிடமே உயர்வு.

எவ்விடத்தில்லை நல்ல ஞானிகளர் மீர்ங்கனி மலர்குளிர் சோலை
யவ்விடங் கானன் மேடதா மாங்கே யமர்பவ ரறிவிலாரன்றே.
ஞா. பாசவிபாசன் கதை 4.

ஊரும் புட்கொடியும் அஃதே உலகெல்லாம் உண்டுமிழ்ந்தான்
சேரும் தன்னனந்தபுரம் சிக்கெனப் புகுதிராகில்
தீரும்நோய் வினைகளெல்லாம் திண்ணம்நாம் அறியச்சொன்னோம்
பேருமோ ராயிரத்துள் ஒன்றுநீர் பேசுமினே.
தி. 10, 2, 3.

கண்ணாளன் கண்ணமங்கை நகராளன் கழல்சூடி அவனை உள்ளத்து
எண்ணாத மானிடத்தை எண்ணாத போதெல்லாம் இனியவாறே.
திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி 11, 6, 7.

இரைக்கும் கருங்கடல் வண்ணன் கண்ணபிரான்தன்னை
விரைக்கொள் பொழில்குருகூர் சடகோபன் சொன்ன
நிரைக்கொ ளந்தாதி ஓராயிரத்துள் இப்பத்தும்
உரைக்க வல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்.
தி. 5, 3, 11. [55-ம் செய்யுள்.

பவத்துன்ப நீங்கு முபாய மியாதெனல்.

தவங்களாற் றெய்வநீராற் சாஸ்திரங்களினாற் போகாப்
பவங்களை யுயர்ந்தோர்பாதம் பணிந்து பற்றறுக்கவேண்டு
மமங்களாங் காரங்கோப மறவுந்தேய் தியற்கையான
சுவங்களி னடந்துன்னூற் றுறைநின்றோ ருயர்ந்தமேலோர்.
ஞா. வீமபாசதிடர் கதை 7.

சாதுசனத்தை நலியும் கஞ்சனைச் சாதிப்பதற்கு
ஆதியஞ் சோதியுருவை அங்குவைத் திங்குப்பிறந்த
வேதமுத லவனைப்பாடி வீதிகள்தோறுந் துள்ளாதார்
ஓதியுணர்ந்தவர் முன்னு என்சவிப்பார் மனிசரே. தி. 3, 5, 5.

இதன் கருத்து :— பாடல்களை ஓதி எல்லாம் கடவுள் என்று வாய் வேதாந்தம் பேசுவதால் உண்மைப் பொருள் விளங்காது. கடவுள் உலகமுய்ய உருவத் திருமேனி தாங்கி வந்துள்ள பெரியோர்கள் என்றும், அப் பெரியோர்கள் சொல்படி வழுவாது நடந்தால் சொந்த சுவானுபூதியில் அழுந்திவிடலாமென்றும் சத்துக்கள் சொல்லுவார்கள்.

56-ம் செய்யுள்.

இப் பிரமத்தை யெமதாந்தரங்களி னுமபேதங்களாக நிச்சயிக்கப்பட்டிருக்குதெனல்.

சாந்தமாகிச் சிதம்பரமாய்ச் சமமாய் நொய்தா யான்மாவா
யேந்துசத்தி யளவிலதா யிடும்பேர் பிரம மெனுமிதற்கே
சேர்ந்தபல நிச்சயம் பண்ணிச் சிலர் பாழென்பர் பரமேசன்
வாய்ந்த வுருவமென்பர் சிலர்மா விஞ்ஞான மென்பர் சிலர்.

ஞா. நிருவாணப் பிரகரணம் 2.

நிறமுயர் கோலமும் பேரும் உருவும் இவையிவை யென்று
அறமுயல் ஞானச் சமயிகள் பேசிலும் அங்கங் கெல்லாம்
உறவுயர் ஞானச் சுடர்விளக்காய் நின்ற தன்றி ஒன்றும்
பெற முயன்றா ரில்லையால் எம்பிரான் பெருமையையே.

நம்மாழ்வார் இயற்பா திருவிருத்தம் 44-ம் செய்யுள்.

யாரும்ஓர் நிலைமைய னென அறிவரிய எம் பெருமான்
யாரும்ஓர் நிலைமைய னென அறிவெளிய எம் பெருமான்
பேரும் ஓராயிரம் பிறபல வுடைய எம் பெருமான்
பேரும் ஓருருவமும் உளதில்லை இலதில்லை பினக்கே. தி. 1, 3, 4.

57-ம் செய்யுள்.

தன்னைத் தானே அருச்சித்தல்.

தன்னதறிவே வடிவாகித் தயங்குதேவின் பூசைக்கு
மன்னுமுப சாரங்களெலா மரபன்றாகு மெப்போது
மின்னலன்றிக் குளிர்ந்தழிவற் றேகமாகி யமுதாகித்
துன்னுதன் போதத்தாலே தூயபூசை செயல்வேண்டும்.

ஞா. தேவபூசை கதை 36.

என்றைக்கும் என்னை உய்யக்கொண்டு போகிய
அன்றைக் கன்றென்னைத் தன்னாக்கிஎன்னால் தன்னை
இன்தமிழ் பாடிய ஈசனை ஆதியாய்
நின்றஎன் சோதியை என்சொல்லி நிற்பனோ. தி. 7, 9, 1.

58-ம் செய்யுள்.

தன்னைத் தானே தியானித்தல்.

ஒழியா துள்ளே பரிசுத்த வுணர்வா மறிவே ததுதானே
யிழியா தான தியானமது தானே யியல்பா மருச்சனையாம்
விழிதோல் செவிநா மூக்கைந்தால் விடயங் கொள்ளிற் றுயில்செய்யின்
மொழி கூறிடி லேகிடி லுயிர்க்கின் முற்று முணர்வா யிடல்வேண்டும்.

ஞா. தேவபூசை கதை 37.

சீர்கண்டு கொண்டு திருந்து நல்லின் கவி
நேர்பட யான்சொல்லும் நீர்மை யிலாமையில்
ஏர்விலா என்னைத் தன்னாக்கி என்னால்தன்னை
பார் பரவின்கவி பாடும் பரமரே. தி. 7, 9, 5.

இத் திருவாய்மொழி 11-ம் நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் பார்க்க.

59-ம் செய்யுள்.

சித்தா இருப்பதே ஆத்ம விசாரம்.

அகில சத்தியுமா யொன்று யகந்தமா யறிவுதானே
சகல பாவனைக்கு முள்ளா மெனக்கண்டோர் தம்மைக்
[கண்டோர்
பகர்வுறு நானுமில்லை பிறிதிலை பரமே யுண்டென்
றிகமுற வுள்ளதில்ல திடையுறக் கண்டோர் கண்டோர்.

ஞா. தாமவியாள கடர் கதை 7.

நோக்கி நோக்கி உன்னைக் காண்பான் யான் எனதாவியுள்ளே
நாக்கு நீள்வன் ஞானமில்லை நாள்தோறும் என்னுடைய
ஆக்கை யுள்ளும் ஆவி யுள்ளும் அல்லபுறத்தி னுள்ளும்
நீக்கமின்றி எங்கும் நின்றாய் நின்னை யறிந் தறிந்தே. தி. 4, 7, 6.

நிறைந்த ஞான மூர்த்தியாயை நின்மலமாகவைத்து
பிறந்தும் செத்தும் நின்றிடறும் பேதமைதீர்ந்தொழிந்தேன்.

தி. 4, 7, 7. 60-ம் செய்யுள்.

ஆயுள் தூடணம்.

கால மொருகான் முடியா திதனிடை யெண்ணு ரூண்டோர் கணமுமில்லை
சாலவிது தனைமதித் துவன் காதலிடை வீழ்ந்து தளர்வதேனென்
றூலமதி யாற்கெட்ட வெனைப்போல வீனரார் சொல்லற் பாற்றோ
சீல மறுவா ணாளைப் பெரிதாக நினைவதே சீசீயந்தோ.

ஞா. சனகர்கதை 17.

வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவரேலும்
பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினையாண்டு
பேதைபா லகனதாகும் பிணிபசி மூப் புத்துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே.

தொண்டரடிப்பொடி யாழ்வார் திருமாலை 3.

புகலிட மறிகிலம் தமியமாலோ புலம்புறு மணிதென்ற லாம்பலாலோ !
பகலடு மாலைவண் சாந்தமாலோ! பஞ்சமம் முல்லைதண் வாடையாலோ!
அகலிடம் படைத்திடந் துண்டுமிழ் தளந்து எங்கு மளிக்கின்ற ஆயன்மா
யோன் - இகலிடத் தசுரர்கள் கூற்றம் வாரான் இனியிருந் தென்னுயிர்
காக்குமாறென். தி. 9, 9, 2. [61-ம் செய்யுள்.

நூல் முற்றுப்பெற்றது.

திரிசியங்களுக்கப்பால் திருக்குவாகத் தெளிந்து சரீர பாவனை நானென்பதை மறந்த சீவன் முத்தர்களிடம் குற்றமில்லையென்பதை அறிவித்தல்.

தானவ னாகிய ஞானச் செயலுடையார் மாதர்முலை தழுவினாலும்
ஆன தொழில்வகை வகையாய்ச் செய்தாலு மனுபோக மவர்பாலுண்டோ
கானுறையுந் தண்டலையா ரடிபோற்றுஞ் சுந்தரனைக் காமி போலாய்
மேனவிலுஞ் சுகம் படுக்கை மெத்தை யறியாதெனவே விளம்பினரே.

தண்டலையார் சதகம் 75.

தீனமுற வருபொருளைச் சிந்தியார் வந்தபொருட் டீதெண்ணார்
ஞானபர ரானோர்க்குச் சுபாவமாங் குணமிதுமே நளினக் கண்ணா.

ஞானவாசிட்டம் தாசூரன் 45.

பராபரங் கண்டோ ரணைத்தும் பின்செல்வ ருலகியல்பு பற்றார் நீங்கார்
சுராலைய நந்தனவனத்தும் பற்றார்கள் சூனியத்தும் துயர மெய்தார்
விராவு நியதியுந்தள்ளார்வெய்யவன்போ லனுசரிப்பர் மேன்மைசான்றோர்
ரிராகவனே யிவ்வாறு நடத்தியென வசிட்டமுனி யியம்பலோடும்.

ஞா. தாசூரன் 49.

காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தை சுற்றி
ஓடே யெடுத்தென்ன வுள்ளன்பிலா தவரோங்கி விண்ணோர்
நாடே யிடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே.

பட்டினத்தார்.

மனத்தகத் தழுக்கறாத மௌனயோக ஞானிகள்
மனத்தகத் திருக்கினும் மனத்தகத் தழுக்கறார்
மனத்தகத் தழுக்கறுத்த மௌனயோக வேசியர்
முலைத்தடத் திருப்பினும் பிறப்பறுத்து நிற்பரே.

சிவவாக்யர்.

யானெனத் தென்பதின்றி யெவ்வகைப் பொருளுவிட்டான்
றானெனச் சரிக்கின்றான் யாரவனையே யடையுஞ்சாந்தி
ஈனம தடையாதித்தை யடைந்தவ ரிறக்கும்போதின்
ஞானமே யடைவாரென்னை நண்ணுவார் பிறவிநண்ணார்.

பகவற்கிதை 2-வது சாங்கியோக அத்தியாயம் 59-ம் செய்யுள்.

இப்படியு யிரையு மியாக்கை தன்னையு
மெய்ப்பட வறிந்தவன் வேட்டவை நுகர்ந்
தொப்பன வன்றியே யொழுகி வாழினும்
பொய்ப்படு பிறவியின் மறுத்தும் போகிலான்.

பகவற்கிதை பிரகிருதி புருடயோக அத்தியாயம் 13. 22-ம் செய்யுள்.

யாவனொருவன் றன்னுடம்பை யானென் றிருக்கு மியல்பொழிந்தா
னியாவ னொருவன் றன்கரண மியாதொன்றோடும் விளைந்திரா
னியாவனவ னிவ்வுலகத்தை யடையக் கொன்று னயினுமோர்
பாவமில்லை யவன்கொன்ற பழியுமில்லை பார்மன்னா.

18-வது உபநிசத்துப் பிரதிபந்தன மோக்ஷயோக அத்தியாயம் 17.

ஊனையே முதலா வென்பா லூக்கிய வுணர்வோர் நாளு
நானையே விட்டுத்தீமை புரியினு மவர்க ணல்லோ
ரேனையே புயத்தா யென்றுங் கேடிலா வின்பமல்லா
தானையே யொருகே டில்லை யவர்களுக் கெங்குமென்றும்.

9-வது மாயா விகார அத்தியாயம் 21.

சீவன்முத்தரது சகநடையைத் தெரிவித்தல்.

வருதொழிலின் விருப்புறுன் வத்தமான வழிநிற்பன் சென்றவற்றை மனத்தி னெண்ணுன் - கருமமுழுவது மியற்றுந் தொடர் பந்தத்திற் கலந்த வர்பான் மனம்பற்றுன் கவலேகூரான் - மருவியவோர் பத்தர்பாற் பத்தனு கும் வஞ்சகர்பால் வஞ்சகனும் வாலர்தம்பாற் - பருவமுரு வாலனும் விருத் தராஞேர் பாலவிருத்தனுந் தீரர்பாலு மாங்கே.

ஞானவாசிட்டம் வீதகவ்வியன் கதை 25.

பற்றுமுனி வுபயஞ் சுகங்கள் பயிலா னெனினும் பயின்றிடினுஞ்
சொற்ற வெவர்க்கும் பிரமேயந் தொடரா னெனினு நன்பாலர்
பெற்ற பிரமேயத்துறினும் பெரியமனத்தோன் காசியிற்சா
வுற்றபொழுது நாய்க்கெரிப்போ ருழைசாவுறினு முறும்பதங்கள்.

ஞா. இட்சுவாகு கதை 63.

செப்பியவத் திறநின்று பற்றென்றின்றிச் சீவத்தன்மையைச் சேரா சீவன்முத்த - ரிப்புவியிற் றெழிலெல்லாஞ் செய்க தீர்கவின்ப வுணர்வன செய்கை யியற்றினலும் - தப்பறவே விட்டாலுந் தொழில்கடன்றற் றருப யன்க ளொருசிறிதுந் தாக்கமாட்டா - மைப்புயல்கள் பலவிதமா யெழுந்த போதும் வானகத்திற் பற்றுத வகையேபோல.

ஞா. வீதகவ்வியன் கதை 13.

பாவனைதீர் துரியமதி னிளைப்பு நீங்கிப் பவமென்னுங் கடல்கடந்து பாரஞ்சேர்ந்தோன் - சீவனென நின்றுலுஞ் சீவத்தன்மை தீர்ந்தாலு மில்ல றத்திற் செறிவுற்றுலுங் - கேவலஞ் சந்நியாசியாயி ருந்தபோதுங் கிளர்சுருதி மயக்கத்தாற் கிடைப்பட்டாலு - மியாவதுஞ் செய்துந் தவிர்ந்தும் பயனெ ன்றில்லை யிமகிரியு ருக்கடல்போ லியல்பினிற்பன்.

ஞா. முமூசுப் பிரகரணம் 26.

உணர்வுடைய ஞானியெவை புரிந்திடினு மிழிவிலிழி வுரைத்த தாகின்
இணையிலிரு தீயனென்பர் யூகமில வதனுன் மற்றெவைகள் செய்தும்
அணைவதிருழ் வெனுமவனே தீயன்மிக ஞாநமதற் காருந்தாழ்வா
னனுகினன்றே ஞானமொருவனை ஞானியெனப் பெயரு நண்ணிநிற்றல்.

மகாராஜாத் துறவு 110-ம் செய்யுள்.

ஞானிகள் பிராரர்த்தத்தை பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு சமமாக இருப்பார்கள்.

கற்றவறிஞ ரறிவில்லோ ரெல்லாங் காணப்படு பொருளா
யுற்றபடியால் விதிவசத்தே யுறுவர் கடலி லுறுநீர்போ
நித்த மறிஞர் சமபுந்தி நிலையார்கை காலசைதலினுற்
பெற்ற வுடலம் விடுமளவும் பெயரா விதியைப் பின்செல்வர்

ஞா. சிகித்துவன் கதை 193.

வாசனுக்ஷயஞ்செய்த பூர்ண ஞானிகள் உலகத்தி லிச்சையானபடி சஞ்சரிக்கலாம்.

இதமான வுதாரியாய்க் கடிஞசார மின்றியா சாரங்கட் கெளிது மின்பேரய் விதமான வனைத்துக்குஞ் சார்பை நோக்கி வேண்டியவாறுலகில் விளையாடு வீரா - புதனுகி நிராசைதனை யுள்ளே தேக்கிப் புறத்தே யாசையிற் றெழில் கள் பூண்டான்போலா - யதனுலுட் சீதளமாய்ப் புறம்வெய்தாகி யனவரத முலகில் விளையாடுவீரா.

ஞா. புண்ணிய பாவனன் கதை 34.

செனியாதவ ரிலக்கணம்.

இழிவுயர் விரண்டு மென்ற ரிச்சை கோபங்க ளெய்தார்
தொழிறெழி லிலாமை விட்டோர் துன்னிய பிறப்பிற் சேரா
ரெழில்பெற விள்ங்கி யார்க்கு மினியன வினிதிற் சொல்வோ
ரழிபொரு ளளைத்தின் சார்பை யறிந்துளோர் பிறப்பிற் சேரார்.

ஞா. புண்ணியபாவனன் கதை 31.

திருமா லுருவொக்கு மேரு அம்மேருவில் செஞ்சுடரோன்
திருமால் திருக்கைத் திருச்சக்கர மொக்கும் அன்ன கண்டும்
திருமா லுருவோ டவன்சின்னமே பிதற்று நிற்பது ஓர்
திருமால் தலைக்கொண்ட நங்கட்கு எங்கேவரும் தீவினையே.

இயற்பா திருவிருத்தம் நம்மாழ்வார் 88.

இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும்
வலிந்து வாதுசெய்வீர்களும் மற்றுநுந் தெய்வமுமாகிநின்றுன்
மலிந்து செந்நெல் கவரிவீசுந் திருக்குருகூரதனுள்
பொலிந்துநின்ற பிரான்கண்டீ ரொன்றும் பொய்யில்லைபோற்றுமினே.

தி. 4, 10, 5.

மேல்கண்ட செய்யுளை உணர்ந்து பர்ருங்கள் பெரியோர் களே. அடியேன் உணர்ந்தவனன்று.

நம்மாழ்வார் சமரஞான உபதேசம் பெற்றது நமது தமிழ்நாடு. அத்தகையநாடு பின்னைநாளில் மதச்சண்டை யால் இடர்ப்பட்டது. இன்னும் மதச்சண்டை புரிய முனை ந்து நிற்போர் தமிழ் நாட்டில் இல்லாமற் போகவில்லை. இவர்களால் நமது நாட்டின் மாண்பு கெடுகிறது. ஆண்டவ னருளால் மதச்சண்டையும் உயர்ந்தகடவுள் எங்களுடைய தென்னும் மூர்க்கமும், எங்கள் நூல் உயர்ந்த தென்னும் மதியிலா வகங்காரமும் ஒய்க! ஒய்க!! ஒய்க!!!

நூல்களை உணர்ந்துபாருங்கள். பெரியோர்களையும், தெய்வங்களையும், நூல்களையும் குறைகூருதீர்கள். இம் மூன்றும் குறைவற்ற சமரசப் பொருள்களென்று வேதங் களும் சொல்லுகின்றன. சத்துக்களும் சொல்லுகின்ருர் கள். சொல்லியிருக்கிருர்கள். சொல்லுவார்கள்.

குலம்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து எத்தனை
நலந்தா னிலாத சண்டாள சண்டாளர்க ளாகிலும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணல்மணி வண்ணற்கா ளென்றுஉள்
கலந்தார் அடியார்தம் அடியார் எம் மடிகளே.

தி. 3, 7, 9.

திடஞானி தெரிசனமே தீர்த்த மாடல்
திடஞானி தெரிசனமே தேவ பூசை
திடஞானி தெரிசனமே செப தபங்கள்
திடஞானி தெரிசனமே செயு மறங்கள்
திடஞானி தெரிசனமே சிவத்தைக் காணல்
திடஞானி தெரிசனமே சிவத்தின் சேவை
திடஞானி தெரிசனமே மேவு தற்குத்
திரிவிதமா மூலகத்து மரிதா மியார்க்கும். (ரிபுகீதை)

வரமான ஞானிக்கு மகிழ்வினேடே வளமான போசனமே யளிப்பதாலுந்- திரமான ஞானிக்குத் தேவையான திரவியமே சிரத்தையொடு கொடுப்பதா லும்- பரமான ஞானிக்குப் பத்தியோடே பலவிதமாம் பணிவிடையே செய் வதாலும் - மரிதான மோட்சசுக மெளிதேயாக மடைந்திடலா மனுவு மிதி லையமில்லை. (ரிபு கீதை)

ஞானியுடை யருச்சனையே செய்வதாலே ஞானபல மடைந்ததனுற் சீவன்முத்தி - யானபர மானந்த மடையலாகு மதன்பின்பு பரமான விதேக முத்தி - தானுமதா லடைந்திடலா மாதலாலே தளர்வுதரும் பவபீதி யனைத் துந்தள்ளி - யானியிலா முத்திநிலை யடையவேண்டி லறிஞனுடை யருச் சனையே செய்யவேண்டும். (ரிபு கீதை)

உன்னைச் சிந்தைசெய்து செய்து உன்நெடுமா மொழிஇசை பாடியாடிஎன்
முன்னைத் தீவினைகள் முழுவேர் அரிந்தனன் யான்
உன்னைச் சிந்தையினு லிகழ்ந்த இரணியன் அகல்மார் வங்கிண்ட என்
முன்னைக் கோளரியே முடியாத தென் னெனக்கே. தி. 2, 6, 6.

இதன் கருத்து:- மனிதனுக்கு எல்லா முடியுமென்று கூறப்பட்டது எதனல்? சர்வ ஆசையுமற்று, உடல் பொருள் ஆவி மூன்றையும் இறைவனுக்கோ இறைவனம் சமாக உருவத் திருமேனிதாங்கிவந்துள்ள சோதி மயமான சற்குருவிற்கோ அர்ப்பணம்செய்யவேண்டும். இது முக்கிய மான கடமை. ஆண்டவனிடத்தில் மாருத நம்பிக்கை, ஐயமின்மை, அஞ்சாமை இவைகளும் முக்கியமானவைகள். இவ்வாறு அநுட்டித்துவந்தால் சர்வ வல்லமையோடுங் கூடிய சீவன் முத்தித்தன்மையைப் பெற்றுவிடலாமென்று சத்துக்கள் சொல்லுவார்கள். அஞ்சாமை என்பது - மாயைக்குப் பயப்படாமலிருத்தல்.

எங்குமுளன் கண்ணன் என்ற மகனைக்காய்ந்து
இங்கில்லை யாலென் இரணியன் தூண்புடைப்ப
அங்கப் பொழுதே அவன்வீயத் தோன்றியவென்
சிங்கப் பிரான்பெருமை ஆராயுஞ் சீர்மைத்தே.

தி. 2, 8, 9.

ஈசனும்ஞானி யிருந்துளவிடத்தே முத்திதா னந்தத்
தேசிக னேவல் செய்பவர்காலென் சென்னியிலிருத்தி
மாசிலாப்பரம ஞானிக்கு மகேசனு மொப்பலன்
மாசிலாஅரியு மொப்பலன் னுமொப்பலன் யாவரொப்பவரே.

(பிரம கீதை)

அல்லலி லின்பம் அளவிறந் தெங்கும் அழகமர்சூ ழொளியன்
அல்லி மலர்மகள் போகமயக்குக்கள் ஆகியும் நிற்கும் அம்மான்
எல்லையில் ஞானத் தன்ஞான மஃதேகொண்டு எல்லாக் கருமங்களும்செய்
எல்லையில் மாயனைக் கண்ணனைத் தாள்பற்றி யான்ஓர் துக்கமிலனே.

தி. 3, 10, 7.

குரவனே பிரமன் மாயோன் குணமுறு முருத்திரன் மெய்க்
குரவனே மகேச்சுரன் சீர்கொளுஞ் சதா சிவனு மாவன்
குருவனே சச்சித் தின்பக் கூடத்தப் பிரம மந்தக்
குரவனேர் மிகுந்த பாதங் கொண்டவர் கொண்டார் வீடே.

(குரு கீதை)

எங்கும் பொதுவா யிலகுமொரு சீவன்முத்தர்
தங்கு மிடமே தலவாசம்—அங்கவர்
பார்வையே தீர்த்தமவர் பாதர விந்தமலர்
சேவையே சாயுஜ்ய மாம். (சொரூபசாரம்).

மெய்யை மெய் யென்ற ஞாநிக்குக்
குற்றங்கள் விதித்த சாத்திர முண்டோ.
கைவல்யம் சந்தேகம் தெளிதற்படலம் 93-ம் செய்யுள்.

பொறுமையாற் பிராரத்தத்தைப் புசிக்குநாட் செய்யுங் கர்மம்
மறுமையிற் தொடர்ந்திடாமல் மாண்டுபோம் வழியே தென்றல்
சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக் கொள்வார்
அறிவுளோ ரறிந்து பூசித் தறமெலாங் கைக்கொள்வாரே.

இதன் கருத்து:—ஞானியை இகழ்ந்தவர்களும், புகழ்ந்தவர்களும் பெரும்பலன் அறிவிக்கப்பட்டது. (கைவல்யம்)

மும்மூர்த்திகளும், ஞானிகளும்.

(மூன்று மூர்த்திகளாந் தேவர் முதல்வர்க்கும் கருணை செய்வர் ஞானிகள்) என்பதைப்போல இன்னும் பல இடங்களில் வேதங்கள் கூறுகின்றன. மும்மூர்த்திகளும் ஞானிகளும் சீவன் முத்தர்களா இருக்க ஞானிகளுக்குச் சிறப்புக் கூறவேண்டியது யாதெனில்? மேற்செய்யுள் ஞான வாசிட்டம்.

திரிமூர்த்திகள் சிருட்டி, திதி, சம்காரம் மாகிய முத்தொழி லியற்றுவதற்காக தங்களிடமிருந்து பொய்யாகிய ஓர் மாயா சக்தியை உண்டுபண்ணி அம்மாயா சக்தியினுடைய நட்பைத் தழுவிக்கொண்டிருக்கிறார்கள். பொய்யான இவ்வுலகசிருட்டிக்காகப் பொய்யானமாயை தேவையாயிருக்கிறது. உதாரணம்:—

போற்றி மற்றோர்தெய்வம் பேணப் புறத்திட்டு உம்மையின்னே
தேற்றி வைத்தது எல்லீரும் வீடுபெற்றால் உலகில்லையென்றே
சேற்றில் செந்நெல்கமல மோங்கும் திருக்குருகூ ரதனுள்
ஆற்ற வல்லவன் மாயம்கண்டீர் அறிந்தறிந்து ஓடுமினே.

தி. 4, 10, 6.

உன்னடிப் போது நான் அணுகா வகைசெய்து போதி கண்டாய் — என நம்மாழ்வாரும்,

தென்பா லுகந்தாடும் தில்லை சிற்றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடி
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ —

என்று திருவாசகத்தில் மாணிக்கவாசகசுவாமிகளும் கூறி இருக்கிறார்கள்.

கூறி இருந்தபோதிலும், பாம்பினிடத்திலுள்ள விஷமானது பிறர்களுக்குத் தீங்கு விளைவிக்குமேயொழிய அப்பாம்பிற்கு யாதொரு தீங்கும் ஏற்படுத்துவதில்லை. அதைப் போலவே பகவானிடத் துண்டான மாயையானது திரிமூர்த்திகளாகிய கர்த்தாக்களையும், ஞானிகளையும் ஒன்றும் வருத்தமுடியாது. ஆனல் அஞ்ஞான மயமாகிய சீவர்களைத் துன்புறுத்துகின்றது. உதாரணம் :—

(நான் சீவனென்னும் வார்த்தையின்றி) என்று சுகப்பிரம ரிஷியும், (மெய்யறிவு மாயை மறைக்க மறையாதால்) என்று பகவானும் (உன்சுடர்ச்சோதி மழுங்காதே)என்று நம்மாழ்வாரும், (பரம்பொருள் பந்தமுற்றிடுமோ முழுதுணர்ந்த பெரியோரை ஈராது பாசமாயை) என்று வசிட்டரும் கூறியிருக்கிறார்கள்.

ஞானிகளாவன.

தன்னைத்தவிர பொய்யான மாயை இல்லவே யில்லை யென்றும், இதுசத்தியமென்றும் இல்லாததை நினைவிற்குக்கொண்டுவர வேண்டாமென்றும் உறுதிப்படுத்திவிட்டு தாங்களும் அந்நிலையி லிருக்கிறார்கள். உதாரணங்கள் :—

மேனியிற் புறத்தினுள்ளிற் மேலொடு கீழிற்றிக்கில்
வானில் வையகத்தி லெங்குநா னன்றிமற்றென்றில்லை — என்று
ஞானவாசிட்டம் கசன்கதை 20-ம் செய்யுளும்,

நித்திரை யுணர்ந்தபின்பு நிற்கின்ற கனவேபோல
அத்தனையும் பொய்தானே மாநந்த வடிவுநானே — என்று

கைவல்யம் தத்துவ விளக்கப்படலம் 173-ம் செய்யுளும் கூறுகின்றன.

இந் நூலிலும் 53-வது செய்யுளைப் பாருங்கள்.

மும்மூர்த்திகள் முத்தொழில் நடத்துவதற்காக சீவன்களை அஞ்ஞானத்தி லமிழ்த்திவிட்டு தாங்கள் சைதன்யமாகவே இருந்துகொண்டும் பெரியோர்களிடத்தில் மாயையை ஏவுதலில்லாமலும் இத்தகைய நிலையை யுடையவர்களாக இருக்கிறார்கள் என்றும், ஞானிகள் சர்வ சீவன்களையும் தன்னைப்போலவே சைதன்யமாக்குவதுடன் பிர்மமாகிய உன்னைத்தவிர வேறொன்று மில்லையென்று போதித்துக் கொண்டும் தாங்களும் தானே தானான சொந்த சுவானுபூதியில் அழுந்தி இருப்பார்களென்றும் வேதங்களும் சொல்லுகின்றன. சத்துக்களும் சொல்லுவார்கள்.

உதாரணம் :— திருவாய் மொழி 3, 10, 7 பாக்களைப் பார்க்க.

ஆகையினால் மும்மூர்த்திகளும் ஞானிகளும் அறிவினால் சமத்துவ முடையவர்களேயொழிய கற்பனையிலன்று. பாகுபாடு இவ்வளவுதான் கூறலாம்.

உதாரணம் :—(உளதிலதாம் இலதுளதாம் இம்மாயை வல்லபத்தால்) என்று வாசிட்டம் கூறுகிறது. இந்நிலையை உணர்த்துவதற்கு அடியேன் தகுதியற்றவனாக இருந்தபோதிலும் பெரியோர்களே உணர்ந்துபாருங்கள். மேலே கூறப்பட்ட கருத்துக்களைக்கொண்டுதான் மும்மூர்த்தியை விட பரம ஞானிகள் சிறந்தவர்களென்று வேதங்கள் கூறுகின்றன. உதாரணம் :– 'மாசிலாப் பரம ஞானிக்கு மகேசனு மொப்பலன் மாசில வரியு மொப்பலன் நானு மொப்பலன்' என்று பிரமகீதை கூறுகிறது.

மும்மூர்த்திகளின் தன்மை.

உன்பாதம் நண்ணிலா வகைநலிவான் இன்னமெண்ணுகின்றாய்
மாயையை இராப்பகல் மோது வித்திட்டு
உன்திருவடிச் சாதியாவகைத் தடுத்துநீ என்பெறுதி
உன்னைநான் அணுகாவகை செய்து போதிகண்டாய்.

தி. 7, 1, 1, 2, 3.

சீவன்முத்தர் இலக்கணம்.

காமமாதிகள் வந்தாலும் கணத்திற்போம் மனத்திற்பற்றார்
தாமரையிலைத் தண்ணீர்போற் சகத்தொடுங் கூடிவாழ்வார்
பாமரரெனக் காண்பிப்பார் பண்டிதத் திறமைகாட்டார்
ஊமருமாவா ருள்ளத்து வகையாஞ் சீவன்முத்தர்.

கைவல்யம் தத்துவ விளக்கப்படலம் 89-ம் செய்யுள்.

வாழி.

வேதவித்தாய் விளங்கும் விலக்ஷண னந்தமூர்த்தி
பாததாமரைகள் வாழி படிபுக ழன்னோன்பாதப்
போதினை யடைந்தோர்வாழி புகலரு மறைகள்வாழி
மாதவம் புரிவோர்வாழி மகிதலம் வாழிவாழி.

சச்சிதானந்த சமரச சற்குரு சரணாரவிந்தமே சரணம்! சரணம்!! சரணம்!!!

மும்மூர்த்திகள் பொய்யான மாயையை மெய்ப்படுத்தி காட்டிக்கொண்டிருப்பதே சுபாவ குணமுடையவர்களாக இருக்கிறார்கள். பரம சுத்த ஞானிகள் மாயையில்லை என்பதை காட்டிக்கொண்டிருப்பதே சுபாவகுண முடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் தங்களுடைய சொந்த அநுபவத்தில் ஒரே நோக்கமுடையவர்கள் என்பதில் ஐயமில்லை யென்று சத்துக்கள் சொல்லுவார்கள்.

கடவுளின் தோத்திரப் பாடல்கள்.

அண்டமென்னு மொருவீட்டி லரியபொருள்சேர் சரக்கரையே
சண்டபானு வெனவுதயாத் தமமற்றொளிருந் தற்பரமே
கண்டவுயிர்க ளனைத்திற்குங் களைகனை வான்றுணையே
புண்டரீகை நாயகமே போற்றிபோற்றி மிகப்போற்றி.
ஞானவாசிட்டம் பிரகலாதன் கதை 19.

மேலோனுகிச் சகம்படைக்கும் விளையாட்டுடைய வித்தகனே
நாலோடொருப தெனுமூலகில் நண்ணுவுயர்ந்த நற்பொருளே
யாலோனுகிக் கண்வளர்ந்த வையாமெய்யா வருண்மூர்த்தி
பூலோகத்தி னுயகமே போற்றிபோற்றி மிகப்போற்றி.
ஞா. வி. 20.

கேதமிகுந்த வசுரரெனுங் கிளைத்தாமரைக்கு நெடும்பனியே
வேதநெறிச்செல் லமரரெனும் விரிதாமரைக்கு வெய்யோனே
பேதமருத்தோ ருள்ளமெனும் பெருந்தாமரையிற் பிரமரமே
பூதமனைத்தி னுயகமே போற்றிபோற்றி மிகப்போற்றி.
ஞா. வி. 21.

மனிசரும் மற்றும் முற்றுமாய் மாயப்பிறவிதந்த
தனியன் பிறப்பிலிதன்னைத் தடங்கடல் சேர்ந்தபிரானை
கனியைக் கரும்பினின்சாற்றைக் கட்டியைத் தேனை அமுதை
முனிவின்றி யேத்திக்குனிப்பார் முழுதுணர் நீர்மையினரே.
திருவாய்மொழி 3, 5, 6.

என்னதாவி மேலையாய் ஏர்கொளேழுலகமும்
துன்னிமுற்று மாகிநின்ற சோதிஞான மூர்த்தியாய்
உன்னதென்ன தாவியும் என்னதுன்ன தாவியும்
இன்னவண்ண மேநின்றாய் என்றுரைக்க வல்லேனே.

தி. 4, 3, 8.

சீலமில்லாச் சிறியனேலும் செய்வினையோ பெரிதால்
ஞாலமுண்டாய் ஞானமூர்த்தி நாராயணா என்றென்று
காலந்தோறும் யானிருந்து கைதலை பூசலிட்டால்
கோலமேனி காணவாராய் கூவியும் கொள்ளாயே.

தி. 4, 7, 1.

அம்மான் ஆழிப்பிரான் அவன்எவ்விடத்தான் யான்ஆர்
எம்மா பாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும்கண்டீர்
கைம்மா துன்பொழித்தாய் என்றுகைதலை பூசலிட்டே
மெய்மா லாயொழிந்தேன் எம்பிரானும் என்மேலானே.

தி. 5, 1, 7.

கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக் கினியன கண்டோம்
தொண்டீர் எல்லீரும் வாரீர் தொழுது தொழுது நின்றார்த்தும்
வண்டார் தண்ணந் துழாயன் மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்தான் பாடிநின் றாடிப் பரந்துதிரி கின்றனவே.

தி. 5, 2, 1.

விண்ணுளார் பெருமாற் கடிமைசெய் வாரையும் செறும் ஐம்புலனிவை
மண்ணு ளென்னைப் பெற்றால் என்செய்யா மற்றுநீயும் விட்டால்
பண்ணுளாய் கவிதன்னுளாய் பத்தியி னுள்ளாய் பரமீசனே வந்தென்
கண்ணுளாய் நெஞ்சுளாய் சொல்லுளாய் ஒன்று சொல்லாயே.

தி. 7, 1, 6.

அற்புதன் நாராயணன் அரி வாமனன்
நிற்பது மேவி இருப்பதுஎன் னெஞ்சகம்
நற்புகழ் வேதியர் நான்மறை நின்றதிர்
கற்பகச் சோலைத் திருக்கடித் தானனே.

தி. 8, 6, 10.

அருள்தான் இனியான் அறியேன் அவன்என்னுள்
இருள்தா னறவீற் றிருந்தான் இதுவல்லால்
பொருள்தா னெனில் மூவுலகும் பொருளல்ல
மருள்தா னீதோ மாயமயக்கு மயக்கே.

தி. 8, 7, 3.

உரைக்க வல்லேனல்லேன் உன்னுலப்பில் கீர்த்திவெள்ளத்தின்
கரைக்கணென்று செல்வன்நான் காதல்மைய லேறினேன்
புரைப்பிலாத பரம்பரனே பொய்யிலாத பரஞ்சுடரே
இரைத்து நல்லமேன்மக்க ளேத்தயானு மேத்தினேன்.

தி. 4, 3, 9.

யானுமேத்தி ஏழுலகமும் முற்றுமேத்தி பின்னையும்
தானுமேத்திலும் தன்னையேத்த வேத்த எங்கெய்தும்
தேனும்பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்திப்ப
யானும் எம்பிரானையே ஏத்தினேன் யானுய்வானே.

தி. 4, 3, 10.

கண்டேன் கமலமலர்ப் பாதம் காண்டலுமே
விண்டே யொழிந்த வினையாயின வெல்லாம்
தொண்டே செய்து என்றும் தொழுதுவழியொழுக
பண்டே பரமன் பணித்த ப்ணிவகையே.

தி. 10, 4, 9.

வாழி.

வசிட்டமா முனிவர்வாழி வாசிட்ட நூலும்வாழி
வகுளாபரணெனு முனிவர்வாழி வாய்மொழி நூலும்வாழி
வானிலும் பெரியோர்கள்வாழி வாதிலா மோனம்வாழி
வாரிதி போன்றோர்கள்வாழி வையக மகான்கள்வாழி.

சுபம் ! சுபம் !! சுபம் !!!

ஆசையினுடைய தன்மையாவன.

(1) விண்ணில் இருண்ட மேகமானது சூழ்ந்துகொண்டிருக்கும்போது எப்படி நக்ஷத்திரங்கள் நமது கண்ணுக்குப் புலப்படாமலிருக்கின்றனவோ அதைப்போலவே ஆசை யாவரையும் பிணித்துப் பெரிய மயக்கத்தைக்கொடுத்து ஆத்ம ஞானத்தை யடைவதற்குத் தகுதியற்றவர்களாகச் செய்து விடுகின்றன. ஆகையினுல்தான் (யாவரும் பெறற்கரிய வீடு) என்று நம்மாழ்வார் கூறி இருக்கிறார். ஆசையாகிய இருண்ட மேகத்தை அருள் அறிவென்னும் சண்டமாருதக் காற்றினுல் சின்னபின்னப் படுத்தித் துரத்திவிடவேண்டும். (அவையாவன:– மாயையெனு முகிலை யறவொழிக்குஞ் சண்டமாருதம்போன் றொளிருமுன்றன் மலர்த்தாள் போற்றி) என்று முத்தையா சுவாமியும் கூறி இருக்கிறார்.

(2) சாஸ்திரங்கள் கற்றும், சாது சங்கத்திலும், பெரியோர்களிடத்திலும் நெடுநாள் பழகியும், மஹான்களிடத்தில் உபதேசம் பெற்றும் விஷத்துக்கொப்பான மாயையென்னும் ஆசையை விட்டுவிடுவதற்கு திறமை இல்லாத அப்பியாசிகளைப் பிரயோஜன மில்லாதவர்களென்று வேதங்கள் சொல்லுகின்றன. எப்படியெனில்? நூல் முறை தவறினோரை, (வேசரியே தள்ளத்தக்கோர்) என்று வாசிட்டத்தில் வசிட்டரும், (கற்று மறிவில்லாத அறிவை என்சொல்லுவேன்) என்று தாயுமானவரும், (கற்றதனால் ஆய பயனென்) என்று வள்ளுவரும், (சொன்னால் விரோதமிது உங்களுக்கு) என்று நம்மாழ்வாரும் இன்னும் பல பெரியோர்களும் பல சாஸ்திரங்களில் கூறிஇருக்கிறார்கள். ஆகையினால் சீலம் முதலான குணங்களோடு நிற்பதுடன் ஆசையாகிய மயக்கத்தை விடாதவர்களைப் பிரயோஜன மில்லாதவர்களென்று சத்தியமாக ஐயமறக் கூறிவிடலாமென்று சத்துக்கள் சொல்லுவார்கள். ஏனென்றால், ஆசை அப்பியாசங்களைப் பதியவிடாமை பற்றியே (பின் வருமாறு) செய்யுள்:-

ஆசையெனும் பெருங்காற் றூடிலவம்பஞ்செனவு மன தலையுங்கால - மோசம்வரும் மிதனாலே கற்றதும் கேட்டதுந் தூர்த்து முத்திக்கான - நேசமும் நல்வாசமும் போய்ப் புலனாயிற் கொடுமை பற்றிநிற்ப ரந்தோ-தேசுபழுத் தருள் பழுத்த பராபரமே நிராசையின்றேற் றெய்வமுண்டோ.

என்று தாயுமானவர் கூறி இருக்கிறார்.

(3) வாசனாக்ஷயம், மனோநாசம், விஸ்ராந்தி, மனத் தூய்மை, சங்கற்பநாசக, விசாரணை, பக்தி, தானம், தருமம் சத்கருமம், ஒழுக்கம் முதலானவைகளைக்காட்டிலும் உயர்ந்த மார்க்கம் மிகப் பெரியோர்களால் கூறப்பட்டுள்ளது ஒன்று உண்டு. அவையாவன? செய்யுள் :— சித்தசய மாத்திரமாந் தெய்வமருந்தா லன்றிச் சென்ம வெங்நோய்- சத்தியமே பிறமுயற்சி யாவையினும் தீராது தகைமை மிக் கோய் - வைத்தநிகழ் காலத்துக் கனத்தில்வரு மியல்புற வாகியத்தாற் பற்றி - யொத்துவரு மெதிர்கால மிறந்தகாலங் கருதா ருளமிலாதார்—ஞானவாசிட்டம் உத்தாலகன்

கதை 2. குரவனுணர்த்து ஞான மெய்ப்பட வந்தாற் சுகமாம் போது போக்குக் கிரியை விநோதமன்றே - ஞா சிகித்துவசன் கதை 93. எனைத்து ஞான நன்னூலி னியம்புமறுதி யாதென்னி - லனைத்துங் கனவு காண்பதுவே யன்றேவவிஞ்சை யிங்கில்லை - வினைத்தின் கவலை செய்கின்ற வெய்யமாயை தானில்லை - தினைத்துன்பமு மற்றுபசாந்தத் திறமா மிதுவே திகழ்பிரமம். ஞா. நிருவாணப்பிரகரணம் 1.

இவையெனு மனைத்துஞ்சிற் கனமாகி யிறப்பிலா பிரமமே யென்று
நவையுறு மனமாங் கற்பனையில்லை நாசமும் பிறவியும் மென்னு
மவையெலாம் புவன மூன்றினுமில்லை யறுவகை விகாரமு மில்லை
கவையறு சமமாங் குறிபெறு மறிவு மாத்திரங் காணநின்றுளதால்.

ஞா. உற்பத்திப் பிரகரணம் 21.

ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும்நாம்
தெளிகுர லருவித் திருவேங் கடத்து
எழில்கொள் சோதி எந்தைதந்தை தந்தைக்கே.

திருவாய்மொழி 3, 3, 1.

மிக்கஞான மூர்த்தியாய வேத விளக்கினை
என் தக்கஞானக் கண்களாலே கண்டுதழுவுவனே.

தி. 4, 7, 10.

அவனே அவனும் அவனும் அவனும்
அவனே மற் றெல்லாமும் அறிந்தனமே.

தி. 9, 3, 3.

அறிந்தனர் எல்லாம் அரியை வணங்கி
அரிந்தனர் நோய்க ளறுக்கும் மருந்தே.

தி. 9, 3, 4.

மனமே உன்னை வல்வினையேன் இரந்து
கனமே சொல்லினேன் இதுசோரேல் கண்டாய்
புனமேவிய பூந்தண் துழா ''லங்கல்
இன மேது மிலானை அடைவதுமே.

தி. 9, 3, 5.

மைக்கா விருட்டனைய விருளில்லை யிருவினைகள் வந்தேற வழியுமில்லை
மனமில்லை யம்மனத் தினமில்லை வேறுமொரு வரவில்லை போக்குமில்லை
யக்கால மிக்கால மென்பதிலை யெல்லா மதீதமய மானதன்றோ.

ஆனந்தபரம் தாயுமானவர் 10-ம் செய்யுள் முதலானவைகளும் கூறுகின்றன. மேற் செய்யுள்களின் கருத்து சுத்தமே சத்தியமாக எதார்த்தம் சுத்தத்தினல் கற்பனைகளெல்லாம் அழியும் என்பது புலப்படுகிறது.

(4) சுத்தப் பிரமமே திரிமூர்த்திகளென்னும் திரு நாமங்களை யுடையவர்களாகவும் மகா மகா வல்லமை யுடையவர்களாகவும், மாயை சுவாதீனமுடையவர்களாகவும், சர்வ அண்ட பகிரண்டங்களுக்கெல்லாம் முத்தொழில் கர்த்தாக்களாகவும், மாயையினல் மறைக்க மறைவுபடாதவர்களாகவும், சிறந்த சீவன் முக்தர்களாகவு மிருப்பதால் சர்வமகத்துக்களும் அவர்களின் கிருபையைப் பெறவேண்டுமென்றும், அவர்களின் கிருபையைப் பூர்ணமாய்ப் பெருதவர்கள் மருளுடையவர்க ளென்றும் அவர்களின் பூர்ண கிருபையைப் பெற்றவர்கள்தான் மிகச் சிறந்த அருளுடையவர்களென்றும் வேதங்கள் பல இடங்களில் கூறுகின்றன. ஏனென்ருல் மாயை சுவாதீனமுடையவர்களாக யிருப்பதால் அப்பியாசிகள் உய்வதற்கும் (*ஞானிகளின் தெளிவு துளிக்கூட கலங்காம லிருப்பதற்காகவும்) மும்மூர்த்திகளை வணங்கவேண்டு மென்பது புலப்படுகிறது. அவையாவன?

* சந்தேகம் ஏற்பட்டால் ஞானவாசிட்டம் பிரகலாதன் கதையில் 48-வது செய்யுளிலிருந்து 61-வது செய்யுள் வரைக்கும் மும்மூர்த்திகளின் வல்லமையைப் பாருங்கள்.

வானமா முலகமேறி வாழ்ந்து மண்ணிடையே வீழ்ந்திட்
டீனமா மாசையாலே யிறப்பதும் பிறப்பதாவார் — என்று

கீதையில் பகவானும், சுகர் வாம தேவர்முதல் ஞானிகளு முனைமெச்சுவார் என்றும்,

வாரிதியி லாழ்த்திடும் பாழான சிற்றிடை மடந்தையர்கள் சிற்றின்பமோ
புத்தமிர்த போகம் புசித்து விழியிமையாத பொன்னுட்டும் வந்ததென்ருற்
போராட்ட மல்லவோ பேரின்ப முத்தியிப் பூமியி லிருந்துகாண
வெத்தனை விகாதவரு மென்றுசுகர் சென்றநெறி யிவ்வுலக மறியாததோ.
என்று தாயுமானவரும்,

படிமன்னு பல்கலன் பற்ளே டறுத்து ஐம்புலன் வென்று
செடிமன்னு காயம் செற்ருர்களும் அரிஅயன் அரனைப் போற்றுவார்கள்
என்றும்,

கலக்கமில்லா நல்தவ முனிவர் கரைகண்டோர்
துளக்கமில்லா வானவர் எல்லாம் தொழுவார்கள் —என்று
நம்மாழ்வாரும் கூறி இருக்கிருர்கள்.

திருமூர்த்திகளின் நன்றியாவன.

சார்ந்த இரு வல்வினைகளும் சரித்து மாயப் பற்றறுத்து
தீர்ந்து தன்பால் மனவைக்கத் திருத்தி வீடு திருத்துவான்
ஆர்ந்த ஞானச் சுடராகி அகலம் கீழ்மே லளவிறந்து
நேர்ந்த உருவாய் அருவாகும் இவற்றி னுயிராம் நெடுமாலே.
தி. 1, 5, 10.

இங்கு நெடுமாலே என்று, சொந்த நாயகனின் திருநாமம் அழைக்கப்பட்டிருந்தபோதிலும், வேற்றுமைகள் காணப்படாமையால் மூவருக்கும் உதாரணமென்பது பொருள்படுகிறது.

கீழ்க்கண்ட மூன்று பாசுரங்களும் நாஸ்திகர்கள் பதவியடைந்த நிலையைக் கூறுகின்றது.

கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்லால் மற்றும் கேட்பரோ
கேட்பார் செவிசுடு கீழ்மை வசைவுக ளேவையும்
சேட்பால் பழம்பகைவன் சிசுபாலன் திருவடி
தட்பா லடைந்த தன்மை அறிவாரை அடைந்துமே.
தி. 7, 5, 3-ல் நம்மாழ்வாரும்,

வைதுநின்னை வல்லவா பழித்தவர்க்கும் மாறில்போர்
செய்துநின்ன செற்றத்தீயில் வெந்தவர்க்கும் வந்துஉன்னை
எய்தலாகுமென்பர் ஆதலால் எம்மாய! நாயினேன்
செய்தகுற்றம் நற்றமாகவே கொள் ஞாலநாதனே.
திருமழிசை யாழ்வார் திருச்சந்த விருத்தம் 111 செய்யுளிலும்,

பேசினர் பிறவி நீத்தார் பேருளான் பெருமைபேசி
ஏசினர் உய்ந்துபோனர் என்பது இவ்வுலகின் வண்ணம்
பேசினேன் ஏசமாட்டேன் பேதையேன் பிறவி நீத்தற்கு
ஆசையோ பெரிதுகொள்க அலைகடல் வண்ணர் பாலே

என்று திருமங்கையாழ்வார் திருக்குருந்தாண்டகம் 17-ம் செய்யுளிலும் கூறி இருக்கிருர்கள்.

இதன்கருத்து பகவான் சமநோக்க முடையவ ராகை யால் அன்பில்லாத நாஸ்திகர்களா யிருந்தபோதிலும், அவனுடைய நாமத்தை மறவாதிருந்தமைபற்றியே இவ் வாய்ப்பை அளித்திருக்கிறபோது மெய்யன்பர்கள் மறப் பற பக்தி பண்ணுகின்றபோது அவன் செய்யும் நன்மை யை என்னென்று சொல்லலாமோ வென்று வியப்படை கிறது மஹான்களே.

விக்கிரக ஆராதனைசெய்தே நம்பி, நம்பியாண்டார் நம்பி, கண்ணப்பர், ராமகிருஷ்ண பரமஹம்சர் முதலான வர்களும் சீவன்முத்தித் தன்மையை அடைந்திருக்கிறபடி யால் விக்கிரக பூசை, சகுணபூசை, நிர்க்குணபூசை முதலா னவைகள் எல்லாம் முக்கியமானவைகள் என்று கருதப் படுகிறது. எந்தப் பூசை செய்தாலும் புருஷனுடைய திறமையேயொழிய வேறன்று. நம்மாழ்வார் - மனன கமல மறக்கழுவ மாதவ னமர்வான் - என்றுப்போல.

உதாரணம் :— செய்யுள்.

செய்ய பரத்துவமாய்ச் சீரார் வியூகமாய்
துய்ய விபமாய்த் தோன்றிவற்றுள், எய்துமவர்க்கு
இந்நிலத்தில் அர்ச்சாவ தாரம் எளிதென்றான்
பன்னு தமிழ்மாறன் பயின்று.

திருவாய்மொழி நூற்றந்தாதி 26.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் 3-பத்தில் 6-ந் திருவாய் மொழியின் 11 பதிகங்களின் கருத்தையும் அமைத்து ஸ்ரீ மணவாள முனிகளால் அருளப்பட்டது.

காட்டவும், பார்க்கவு முடியாத பிரமத்தை கீழ்ச் செய் யுள் உணர்த்துகிறது :—

தானென தன்மயமே யல்லா வொன்றைத் தலையெடுக்க வொட்டாது தலைப்பட்டாங்கே - போனாலும் கற்பூர தீபம்போலப் போயொளிப்ப தல் லாது புலம்வேறின்று - ஞானகாரத்தினொடு ஞேயமற்ற ஞாதுருவு நழுவாம னழுவிநிற்கு -மானாலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வார் அதுவான லதுவாவ ரதுவேசொல்லும். ஆகார புவனம் சிதம்பர ரகசியத்தில் தாயு மானவர் கூறியது.

பிரம நிஷ்டையிலிருந்த பீஷ்மாச்சாரியார் அவதார புருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் முன்னிலையில் மோக்ஷம் தர்மத்திலேயே அடங்கிவிட்டதென்று தர்ம புத்திரருக்குச் சொல்லியிருக்கிறார். தர்மமென்பது மார்க்கம். அதாவது சாஸ்திரம், பெரியோர்கள், தெய்வம், சற்குணம், சாது சங்கம், குருமார்கள், இவைகளெல்லாம் அறம், பொருள், இன்பம் முதலானவைகளே. ஆனால் இம் மார்க்கங்கள் பிரமத்தில் கலரும் வரைக்கும் இருந்தே தீரவேண்டும். ஆகையினால் கடவுளிடம் கலப்பதற்கு புருஷனுடைய முயற்சி எல்லாவற்றிலும் உயர்ந்தது என்பதை நீங்களறிந்த விஷயமே.

உதாரணம் :—

திகழ்மனம் போய்த் தற்பதத்தைத் தெளியுமட்டும்
தேசிகன் நூல் சொல்வழியிற் செல்லுவாயே.

ஞானவாசிட்டம் கூறுகிறது.

மாறாத் துரியநிலை தோன்று மட்டு மிகுநூல்களுபசாந்தி யொழுக்கம் போதமிக்கவர் கூட்டர விவற்றால் விசாரம் வேண்டும்.

முமூட்சுப் பிரகரணம். ஞானவாசிட்டம் (25) 1
அயிட்டம் 4. ஷை கதை.

சமரச சற்குரு சரணாரவிந்தமே சரணம்! சரணம்!! சரணம்!!!

ஆக்கியோன் விளம்பரம்.

யாரேனும் பொருளுதவி செய்தால் தாயும், சேயுமாக அமைக்கப்பட்டுள்ள இந் நூலின் 61 செய்யுட்களுக்கும், பின்னல் திருக்குருமயமான ஞானிகளிடத்தில் குற்ற மில்லை என்ற செய்யுட்களுக்கும் பொழிப்புரை யும், தாற்பரியமும் தெளிவாக எழுதப்படு மென்பதை அறிவிக்கப்படுகிறது.